65

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீநரஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 17.] ப்ரபவஸூ, சித்திரைமீ [ஸஞ்சிகை 7

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேநவத்யா

[ஸ்ரீ பாகவதம். 1-9-23]

ஸ்ரீ:

ஸ்ரீ பாஞ்ச ராத்ரம்

(ஸ்ரீ வாஸுதேவாசார்யர்.)

—:0:—

ஶ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்கள் போல, நமது மத ஸம்பத்தமாக, தந்த்ர க்ரந்தங்களென்று சில ஆகமங்களுண்டு. அவை, பௌத்தம் ஜைநம் ஶாக்தம் ஶைவம் பாஞ்சராத்ரம் என்று ஐந்து வகைப்படும். அவைகளுள் பாஞ்சராத்ரம் என்னும் ஆகமம் ஸ்ரீவைஷ்ணவர்களால் தமது ஸித்தாந்தத்திற்கு முக்ய ப்ரமாணமாகக் கொண்டாடப்படுகின்றது. வேதம் முதலியவைகளில் ப்ரதிபாதிக்கப்பட்டுள்ள விஷயங்களே இந்தப் பாஞ்சராத்ரத்தில் ப்ரதிபாதிக்கப்படுகின்றன வென்பதும், ஆனால், துருஹங்களாகவும் அர்த்த பேதங்களுக்கு ஆஸ்பதங்களாகவு முள்ள ஶ்ருத்யம்ஶங்களெல்லாம் பாஞ்சராத்ரத்தில், விஶதமாகவும் அல்ப புத்தியை உடையவர்களால் கூட எளிதில் க்ரஹிக்கும்படியாகவும் போதிக்கப்படுகின்றன என்பதும் ஸ்ரீ வைஷ்ணவர்களின் கொள்கை. சிற்சில அநுஷ்டாநங்களுக்கு ப்ராதாந்யம் கொடுக்கையிலும், அந்த அநுஷ்டாநங்கள் வேதம் முதலியவைகளுக்கு அவிருத்தங்களாக இருக்கிறபடியால், வேதத்திற்கும் பாஞ்சராத்ரத்திற்கும் எவ்வித விரோதத்தையும் அவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை.

இந்தப் பாஞ்சராத்ர க்ரந்தங்களை ஸம்ஹிதைகள் என்று சொல்வது வழக்கம். அப்படிப்பட்ட ஸம்ஹிதைகள் இருநூற்றுக்கு அதிகமாகவே பூர்வ காலத்தில் இருந்தனவாகத் தெரியவருகின்றது. ஸ்ரீவேதாந்த தேஶிகனுடைய 'பாஞ்சராத்ரரக்ஷை' என்னும் க்ரந்தத்தில் இவைகளுட் பல ஸம்ஹிதைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஈஶ்வர ஸம்ஹிதை, காபிஞ்ஜலம், பாராஶரம், பாத்மம், பாரத்வாஜம், லக்ஷ்மீ ஸம்ஹிதை, விஷ்ணுதிலகம், ஸாத்வதம், அஹிர்புத்ந்யம் ஆக இந்த ஒன்பது ஸம்ஹிதைகள் இன்னும் லுப்தங்களாகாமல் இருப்பனவாகத் தெரிகின்றது. டாக்டர் ஷ்ராடர் (Dr. Schrader) என்னும் ஒரு பாஶ்சாத்ய வித்வான் அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையை நாகர லிபியில் அச்சிடுவித்து, அதற்கு ஒரு பெரிய முகவுரையையும் எழுதி இருக்கிறார். ஸ்ரீ வேதாந்த தேஶிகனுடைய பாஞ்சராத்ர ரக்ஷையும், ஸ்ரீயாமுனாசார்யருடைய ஆகமப்ராமாண்யமும், ப்ரஹ்ம ஸூத்ரத்தில் இரண்டாவது அத்யாயம் இரண்டாவது பாதம் 39 முதல் 42 வரையில் உள்ள நாலு ஸூத்ரங்களும், அந்த ஸூத்ரங்களுக்கு ஸ்ரீ ஶங்கராசார்யர் ஸ்ரீ ராமாநுஜாசார்யர் முதலிய பாஷ்யகாரர்கள் செய்துள்ள பாஷ்யங்களுமே பாஞ்சராத்ர விஷயமான நம்முடைய ஜ்ஞானத்திற்கு முக்ய ஆகரங்களாகின்றன.

மஹாபாரதத்தில் ஶாந்தி பர்வம் 348-வது அத்யாயத்தில், நாரத மஹர்ஷி, ஒரு காலத்தில் ஸ்ரீமந் நாராயணனுடைய வாஸஸ்தாநமாகிற ஶ்வேத த்வீபத்திற்குப் போனதாகவும், ஸ்ரீமந் நாராயணனுடைய ஏகாந்த பக்தர்களால் நிறைந்துள்ள அந்த த்வீபத்தில் ஏதோ ஒரு கடாக்ஷவிஶேஷத்தால் ஸ்ரீமந் நாராயணன் நாரதருக்கு ப்ரஸந்நமாகி, தனது திவ்ய ஸ்வரூபம் திவ்ய அவதாரங்கள் முதலியவைகளை அவருக்கு உபதேஶித்ததாகவும், அந்த உபதேஶமே பிறகு ஜகத்தில் பாஞ்சராத்ரமாக ப்ரசாரத்தை அடைந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த ப்ரகரணத்தில் பின் வருமாறு பாஞ்சராத்ர ப்ரஶம்ஸாபரமான சில ஶ்லோகங்களையும் காணலாம்.

"𑌇𑌦𑌂 𑌮𑌹𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ।
𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌯𑍋𑌗𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌤𑍇𑌨 𑌪𑌞𑍍𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑌾𑌨𑍁𑌶𑌬𑍍𑌦𑌿𑌤𑌮𑍍 ॥
𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌮𑍁𑌖𑍋𑌦𑍍𑌗𑍀𑌤𑌂 𑌨𑌾𑌰𑌦𑍋𑌽𑌶𑍍𑌰𑌾𑌵𑌯𑌤𑍍𑌪𑍁𑌨𑌃 ॥"

[இந்தப் பாஞ்சராத்ரம் என்பது ஒரு பெரிய உபநிஷத்; இது நாலு வேதங்களுக்கும் துல்யம்; ஸாக்ஷாத் நாராயணனாலேயே இது வெளியிடப்பட்டது. இதை நாரதர் ஜகத்தில் ப்ரசரிப்பித்தார்.]

'பாஞ்சராத்ரம்' என்னும் ஶப்தத்தின் வ்யுத்பத்தியைப் பலர் பலவிதமாகச் சொல்லுகிறார்கள். இந்த வ்யுத்பத்திகளிற் சில அந்த ஸம்ஹிதைகளி

லேயே காணப்படுகின்றன. அவற்றுள் ஒரு ஸம்ஹிதையில், ஸ்ரீமந் நாராயணன், இந்த வித்யையை அநந்த கருட விஷ்வக்ஸேந ப்ரஹ்ம ருத்ரர்களான ஐந்து தேவதைகளுக்கு ஐந்து ராத்ரியில் ஐந்து உபந்யாஸங்களாக உபதேசித்தபடியால் இதற்குப் பாஞ்சராத்ரம் என்று பெயர் உண்டாயிற்று என்று சொல்லப்பட்டிருக்கின்றது. மற்றொரு ஸம்ஹிதையில், இந்தப் பாஞ்ச ராத்ரம் என்னும் ஆகம ப்ரகாசத்தால், ஸாங்க்ய யோக பாசுபத பௌத்த ஆர்ஹதங்களான ஐந்து ஸித்தாந்தங்கள் இருளடைந்த இரவுகளாகச் செய்யப்பட்டபடியால், இதைப் பாஞ்சராத்ரமென்று லோகத்திற் சொல்லுகிறார்கள் என்று விவரிக்கப்பட்டிருக்கின்றது. மற்று மொரு ஸம்ஹிதையில், 'ராத்ரம்' என்னும் சப்தத்திற்கு ஜ்ஞாநம் என்பது பொருள் என்றும், இந்தப் பாஞ்சராத்ரம் என்பது தத்வம் முக்தி பக்தி யோகம் விஷயம் ஆக இந்த ஐந்து பதார்த்தங்களை நன்றாக உணர்த்துகிறபடியால் அதற்கு அந்தப் பெயர் வழங்கிவருகின்றது என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. பரம் வ்யூஹம் விபவம் ஹார்த்தம் அர்ச்சை ஆக ஐந்து விதமான பகவத் ரூபங்களை இந்த ஆகமம் விவரிக்கின்றதென்றும், அதனால் அதைப் பாஞ்சராத்ரமென்று சொல்லக் கூடுமென்றும் சிலர் சொல்லுகிறார்கள். இந்த வ்யுத்பத்திகளுட் சில, யுக்தி கல்பிதங்களென்றே சொல்லக்கூடும். ஸம்ஹிதைகளிலேயே இம்மாதிரி பல வ்யுத்பத்தி காணப்படுகிறபடியால், எது உண்மையானதென்று நம்மால் நிர்த்தாரணம் செய்ய ஸாத்யமில்லை.

இந்தப் பாஞ்சராத்ர க்ரந்தங்கள் பல ப்ரகாரமாக விபாகம் செய்யப்பட்டிருக்கின்றன. சில ஸம்ஹிதைகளில், ஆகமம் மந்த்ரம் தந்த்ரம் தந்த்ராந்தரம் என்று அவை நாலு வகைப்பட்டனவென்றும், இவைகளுள் ஆகமம் என்பது மோக்ஷ மார்க்கத்தை மாத்ரம் உபதேசிக்கின்றதென்றும், மற்றை மூன்றும் மற்றை மூன்று புருஷார்த்தங்களைப் பெறும் மார்க்கத்தை விளக்குகின்றன வென்றும் ஒரு விபாகம் தென்படுகின்றது. மற்றொரு ஸம்ஹிதையில், பாஞ்சராத்ரம் பெரும்பாலும் ஆலயங்களைப் பற்றி ப்ரஸ்தாவிக்கிறபடியால், திவ்யம் ஸ்வயம்வ்யக்தம் ஸைத்தம் ஆர்ஷம் என்னப்படும் நாலு வித ஆலய விபாகங்களை அநுஸரித்து க்ரந்த விபாகத்தைச் செய்யலாமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அநேக ஸம்ஹிதைகள் ஜ்ஞாநத்தைப் பற்றிப் பேசும் பாகத்தை ஜ்ஞாந பாதமென்றும், த்யாநத்தைப் பற்றியதை யோகபாதமென்றும், ஆலயங்களில் பிம்ப ப்ரதிஷ்டை முதலியவற்றைப் பற்றி ப்ரஸ்தாவிப்பதை க்ரியா பாதமென்றும், ஸம்ஸ்காரங்களைப்பற்றி விவரிப்பதைச் சர்யாபாதமென்றும் ஆக நாலு பாதங்களாகப் பிரிக்கின்றன.

இவ்விதம், பலவகைப்பட்ட விபாகங்கள் இருக்கையிலும், அவைகளுள் ப்ரதிபாதிக்கப் பட்டிருக்கும் விஷயங்களுள் முக்யமானவற்

றைப் பின்வருமாறு பிரித்து நாம் விசாரிக்கலாம். முதலில் ஸ்ரீ பக வான், ராம க்ருஷ்ணாதி ரூபேண அநேக விதமாக இந்த ப்ரபஞ்சத் தில் அவதரிக்கையிலும், அவனுடைய 'வ்யூஹங்கள்' என்று வ்யவஹரிக் கப்படும் அவதாரத்திற்கு ஒரு வித ப்ராதாந்யத்தைக் கொடுத்து, அந்த வ்யூ ஹாவதாரமாகப் பகவானை த்யானிப்பதையும் அவனைப் பூஜிப்பதையும் இந்தப் பாஞ்சராத்ரம் வற்புறுத்துகின்றது.

"[illegible] ।
[illegible] ।
[illegible] ॥"

அதாவது—ஸ்ரீ பகவான், வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநி ருத்த ரூபமாகத் தன்னை வ்யூஹித்துக்கொண்டு பக்தர்களை அநுக்ரஹிக்கும் பொருட்டு அவதரிக்கிறான்; இந்த நாலு வ்யூஹாவதாரங்களிலும் அவனுக்கு ஜ்ஞாநம் ஶக்தி முதலிய ஆறு குணங்களின் பரிபூர்த்தி இருக்கையிலும், சிற் சில வ்யூஹங்களில் சிற்சில குணங்களின் ஆதிக்யத்தை அவன் வெளிப்படுத்து கிறான்; பக்தர்களுள் எவர் எவருக்கு எந்த எந்தக் குணங்களில் ருசியின் அதிஶயம் இருக்கின்றதோ அந்தந்தக் குணங்களின் ஆதிக்யத்தை உடைய வ்யூஹத்தை அவரவர்கள் ஆஶ்ரயித்து உஜ்ஜீவிக்கலாம்; இவைகளுள் முதல் மூர்த்தியாகிற வாஸுதேவ மூர்த்தியே பரம் ப்ரஹ்மம். இந்த வ்யூஹாவதா ரங்களின் மஹிமையையும் குண விபாகங்களையும் பற்றி நமது ஆசார்யர்கள் பலவாறாகப் புகழ்ந்து பேசி இருக்கிறார்கள்.

"[illegible]
[illegible] ।
....
[illegible] ॥"

[வாஸுதேவன் என்னும் முதல் வ்யூஹ மூர்த்தியானது ஜ்ஞாநம் ஶக்தி முதலிய ஆறு குணங்களாலும் விளங்குகின்றது; மற்றை மூன்று மூர்த்தி களும், அந்த ஆறு குணங்களுள் இரண்டு இரண்டு குணங்களால் ப்ரகா ஶிக்கின்றன. இதுதான் வ்யூஹாவதாரம்] என்று ஸ்ரீ கூரேஶனும்,

"[illegible]
[illegible]
[illegible] ।

ஷ்ஷ்ஷீ ஊ ஹூமஷுயஊஉள நயஸி அ ஹமவ ஸூக்தி தெஜொடீநிர—டூ
ஷி ஹ்ராணः வாஸி ஸக்ஷவம் மஊயஸி அ தயா வ்யூஹஜ்ய ர.மாயிராஜ"

[ஹே பகவந்! நீர் ஸாது பரித்ராணார்த்தமாக வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்த ரூப நான்கு வித வ்யூஹ ரூபியாய் அவதரித்து, அதில் குண விபாகங்களைச் செய்துகொண்டு ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார ரூபமான ஜகத் வ்யாபாரத்தைச் செய்து வருகிறீர்] என்று ஸ்ரீ பட்டரும்,

"ஷூாநேஷு ஜாஶ்ருதி அதஷ்டுவி ஸக்ஷவஞः
ஶாவாவிஹாம அதஷெ தவ ஆதஷாதெஷூ ॥"

[ஸத்வோத்தரர்களான உபாஸகர்கள் உம்முடைய நான்கு திவ்ய மங்கள விக்ரஹத்தையும் உபாஸிக்கிறார்கள்] என்று ஸ்ரீ வேதாந்த தேசிகனும் இந்த வ்யூஹாவதாரத்தைப்பற்றிப் பஹுவாக ப்ரசம்ஸித்திருப்பதை எல்லாரும் பார்க்கலாம். இவ்வளவு தூரம் எல்லா ஆசார்யர்களும் அதை ப்ரசம்ஸித் திருக்கையிலும், இப்பொழுது அநுஷ்டாநத்தில், அந்தவ்யூஹங்களின் ஆராதநமோ த்யாநமோ பூஜையோ ப்ரஸித்தமாகக் காணப்படவில்லை. இது ஒரு ஆச்சர்யமே. நமது ஆலயங்களில் பெரும்பாலும், ஸ்ரீநிவாஸன் ரங்கநாதன் முதலிய மூர்த்திகளே ஆராத்ய தேவதைகளாகக் காணப் படுகின்றனவே தவிர, ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்த மூர்த்திகள் என்று ஓரிடத்திலும் ஒரு தேவதையாவது ஆராதிக்கப்படுவதாகத் தெரியவில்லை. த்வாதசாக்ஷர ஜபம் செய்யும் சில ஏகாந்திகளைத் தவிர்த்து, மாநஸிகமாக இந்த வ்யூஹங்களின் த்யாநத்தைச் செய்யும் மற்றை உபாஸகர்களையும் அவ்வளவாகக் காணோம். என்ன காரணங்களால் இந்த அம்சம் இப்படி லுப்தமாகி விட்டது என்பதை ஊஹிப்பதும் ஸாத்யமில்லாமல் இருக்கின்றது.

இரண்டாவது—பிம்பங்களுடைய ப்ரதிஷ்டை, ஆலயங்களுடைய நிர்மாணம், ப்ரதிஷ்டிதங்களான தேவதைகளின் ஆராதநக்ரமம், அந்தத் தேவதைகளின் உத்ஸவாதிகள் இத்யாதியான விஷயங்களைப் பற்றிய ஜ்ஞாநம் முழுவதும் ஆகமங்களிலேயே காணப்படுகின்றது. பாரத ராமாயணாதிகளில் சைத்யங்களென்றும் ஆயதநங்களென்றும் சில பகவதாலயங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன என்பது உண்மையே. ஆனால், அந்த க்ரந்தங்களிலாவது ஸ்ம்ருதிகளிலாவது ஆலய ஸம்பந்தங்களான விஷயங்கள் விஸ்தாரமாக ஓரிடத்திலும் சொல்லப்படவில்லை. இக்காலத்தில் நாம் தேவாலயங்களைக் கொண்டாடுவதும் அவ்விடத்தில் பகவத் ஸேவையைச் செய்வதும் இவையெல்லாம் ஆகம ப்ராப்தங்களே. வ்யூஹத்தைப் பற்றிய அம்சம் லுப்தமாகி விட்டபோதிலும், ஆலயங்களில் பகவத் ஸேவாதிகளைச்

செய்யும் அநுஷ்டாநம் ஸம்பந்தப்பட்ட வரையில் பாஞ்சராத்ரம் வழங்கி வருகின்றதென்றே சொல்லவேண்டும்.

மூன்றாவது—நம்மால் ப்ரதிதிநம் அநுஷ்டிக்கப்பட வேண்டிய திநசரியைப்பற்றியது. விஷ்ணு பக்தன் ஒவ்வொருவனும், ஒவ்வொரு தினத்திலும் காலையில் ஸ்நாநம் முதலியவற்றைச் செய்தவுடன் பகவதுபாஸந மொன்றைச் செய்யவேண்டுமென்றும், அது முடிந்த பிறகு அன்று பகவதாராதநத்திற்கு அபேக்ஷிதமான த்ரவ்ய ஸம்பாதநத்தைச் செய்யவேண்டுமென்றும், மத்யாஹ்நத்தில் சில க்ரமங்களை அநுஸரித்து ப்ரதிதிநம் செய்யப்படவேண்டிய பூஜையைச் செய்யவேண்டுமென்றும், அதற்குப் பிறகு பகல் முழுவதும் புராண படநம் வேதாந்த விசாரம் இவைகளைச் செய்ய வேண்டுமென்றும், இரவில் போஜநமான பிறகு நித்ரைக்குப் போகுமுன் பகவத் த்யாநம் செய்யவேண்டுமென்றும் பாஞ்சராத்ரம் விதிக்கின்றது இந்த ஐந்து வ்யாபாரங்களும் ஒவ்வொரு திநத்திலும் குறிப்பிட்ட ஐந்து பாகங்களிற் செய்யப்படவேண்டுமாகையால், அதன்படி க்ரமமாக ஆஹ்நிக அநுஷ்டாநம் செய்பவர்களைப் 'பஞ்ச கால பராயணர்க'ளென்று ஸ்ரீ வைஷ்ணவர்கள் வ்யவஹரிப்பார்கள் ; அந்த ஐந்து காலங்களுக்கும், அபிகமந உபாதாந இஜ்யா ஸ்வாத்யாய யோகங்களென்று பெயர் வழங்குவதும் உண்டு ; இக்காலத்தில், பரமைகாந்திகளாக இருக்கும் சில ஸ்ரீ வைஷ்ணவர்கள் மாத்ரம் இந்த அநுஷ்டாநத்தைச் செய்துவருகிறார்களே தவிர, ஸ்ரீ வைஷ்ணவ ஸாமாந்யத்தால் இது குறைவின்றி அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றது என்று சொல்வது ஸாத்யமில்லை. இந்த அநுஷ்டாநத்தின் ஆவஶ்யகதையைப் பற்றியும் ஶ்ரத்தை வரவர குறைந்தே வருகின்றது.

இது ஸம்பந்தமாக வேறு ஒரு அம்ஶமும் உண்டு. இந்தப் பஞ்சகால விபாகத்தைச் சொல்லும் இடத்திலேயே, ஒவ்வொரு வைஷ்ணவனும் உபநயநம் செய்யப்பட்டவுடன் தப்தாங்கநமாகிற ஶங்க சக்ர தாரணத்தைத்தனது புஜங்களில் செய்து கொள்ளவேண்டு மென்றும், ப்ரதிதிநமும் நெற்றி முதலான சில அங்கங்களில் ஊர்த்வ புண்ட்ரத்தைத் தரித்துக்கொள்ள வேண்டுமென்றும், ப்ராஹ்மண ரெல்லாருக்கும் ஸாதாரணமாயுள்ள காயத்ரியின் உபதேஶம் போல அஷ்டாக்ஷரம் முதலான சில மந்த்ரோபதேஶங்களைத் தனது ஆசார்யரிடமிருந்து பெற்றுக்கொண்டு ப்ரதிதிநமும் ஜப காலங்களில் அந்த மந்த்ரங்களை ஜபித்துவரவேண்டு மென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. மந்த்ர ஜபம் அநேகமாக லுப்தமாகி விட்டபோதிலும், தப்தாங்கநம் மந்த்ரோபதேஶம் ஊர்த்வ புண்ட்ர தாரணம் இவைகளின் பாவநை இன்னும் நடமாடிவருவதைப் பார்க்கலாம்.

இவை யெல்லாவற்றையும் காட்டிலும் அதிக ப்ரதானமான நாலாவது அம்சம் ஒன்று உண்டு. அதாவது ஸம்ஸாரத்திலிருந்து மோக்ஷத்தை ஸாதித்துக் கொள்வதற்கு 'ப்ரபத்தி' என்று ஒரு வித்யை உண்டு என்பதுதான். வேறு எவ்வித புகலுமில்லாமல் பூர்ணமான விஶ்வாஸத்துடன் பகவானுடைய திருவடிகளையே ஶரணமாக அடைவதைத்தான் ப்ரபத்தி என்று அவர்கள் சொல்வார்கள். கர்மயோக ஜ்ஞானயோக பக்தியோகம் முதலிய வேறு ஒரு விதமான ஸாதநமுமின்றிக்கே நாம் நமது ஆகிஞ்சந்யத்தை உணர்ந்து பகவானுடைய திருவடிகளையே கதியாகப் பற்றினால், அவன் நம்மை ரக்ஷிக்கிறான் என்பது அவர்களின் கொள்கை. இது உபநிஷத்திலும் கீதையிலும் இதிஹாஸ புராணங்களிலும் ப்ரஸ்தாவிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்விடங்களில் அது விஸ்தரித்துச் சொல்லப்படவில்லை. தவிரவும், அவ்விடங்களில் சொல்லப்பட்டுள்ள ப்ரபத்தி எல்லாம் கர்மயோகம் முதலிய மோக்ஷ ஸாதநங்களான உபாயங்களை ஸாதித்துக் கொடுக்கக் கூடிய அங்கப்ரபத்தியாகச் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, ஸ்வதந்த்ரமாக அது மோக்ஷத்தை ஸாதித்துக் கொடுக்கக் கூடியது என்று சொல்லப்படவில்லை என்று இதற்கு ஒரு பூர்வபக்ஷமும் உண்டு. இந்தப் பூர்வபக்ஷம் எல்லாவற்றையும் அநாதரித்து, இந்த ப்ரபத்தி ஸ்வதந்த்ர வித்யை என்று பாஞ்சராத்ரம் வ்யக்தமாகச் சொல்லுகின்றது. இதை அநுஸரித்து நமது ஆசார்யர்களும் இந்த வித்யையைப் பலவாறாக விஸ்தரித்து அநேக க்ரந்தங்களை எழுதி இருக்கிறார்கள். அநுஷ்டானத்திலும், தென் இந்தியாவில் வஸிக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள், இந்த வித்யை வழங்கிவருகின்றது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆனால், அதன் ஆதி காலத்திய ஸாதுத்வமும் அந்தரங்க ஶக்தியும், இக்காலத்திய அநுஷ்டானத்தில் ஸம்ரக்ஷிக்கப்பட்டு வருகின்றதோ என்பதைப் பற்றி மாத்ரம் அபிப்ராய பேதம் ஜநிக்கலாம்.

இதைத் தவிர்த்து, பாஞ்சராத்ரம் வேறு ஒரு அம்ஶத்தையும் வற்புறுத்துகின்றது. பகவானுக்கு அதிஶலாக்யமான திவ்ய கல்யாண குணங்களின் பூர்த்தியைச் சொல்லுவதுடன், அவனுக்குத் திவ்ய மங்கள விக்ரஹயோக முண்டென்றும், அதன் ஸௌந்தர்யம் அத்யாஶ்சர்யகரமென்றும், அப்படிப்பட்ட திவ்ய விக்ரஹத்துடன் அவன் வைகுண்டமென்று சொல்லப்படும் அப்ராக்ருதமான பரலோகத்தில், தனது ஸஹதர்மசாரிணியாகவும் நித்யமஜ்ஞாத நிக்ரஹையாயுமுள்ள லக்ஷ்மியுடனும், ஒருபொழுதும் கர்ம பந்தத்திற்குப் பாத்ரமாகாமல் எப்பொழுதும் பகவத்தர்ஶநத்தையே அநுபவித்துக் கொண்டு நித்யாநந்த பரிதர்களாயுள்ள கணக்கற்ற நித்ய ஸூரிகளுடனும், சைதந்யத்துடன் கூடிக்கொண்டிருக்கும் திவ்யாபரண திவ்யாயுதங்களைத்

தரித்துக்கொண்டு பக்தர்களை அநுக்ரஹிக்கும் பொருட்டே எழுந்தருளி இருக்கிறனென்றும், அவனை ஆஶ்ரயிக்கும் பக்தர்கள் அவனுடைய திவ்ய க்ருபைக்குப் பாத்ரமாகிக் கர்மபந்தத்திலிருந்து நிவ்ருத்தர்களாய் அந்த வைகுண்டலோகம் சென்று அவனுடைய போகங்களுக்குத் துல்யமான போகங்களை அநுபவித்துக்கொண்டு புநராவ்ருத்தி இல்லாதவராய்ப் பரிபூர்ண ப்ரஹ்மாநந்தாநுபவஶாலிகளாய் இருக்கிறார்களென்றும் இந்தப் பாஞ்சராத்ரம் விஸ்தாரமாகப் பேசுகின்றது. கீழ்ச் சொல்லப்பட்ட ப்ரபத்தி ரூபமான பகவதாஶ்ரயணத்தைச் செய்தவர்கள் இந்தக் கதியை அடைகிறார்கள் என்னும் நிஶ்சயபுத்தி ஸகல ஆஸ்திக வைஷ்ணவர்களுக்கும் உண்டு.

இந்த அம்ஶங்களெல்லாம் வேதங்களிலாவது ஸ்ம்ருதிகளிலாவது வ்யக்தமாகவும் விஸ்தாரமாகவும் சொல்லப்படவில்லை. இவைகளுக்கு வேத ப்ராமாண்யமுண்டு என்று நமது ஆசார்யர்கள் ஸ்தாபித்திருக்கையிலும், இந்தப் பாஞ்சராத்ர க்ரந்தங்கள் ஏற்படாமல் இருந்தால் இவைகள் இந்த ப்ராதாந்யத்துடன் நமது புத்தியில் படிந்திருக்குமோ என்பதும், நம்முடைய நம்பிக்கையும் அநுஷ்டாநங்களும் இப்பொழுது இருப்பது போல இருந்திருக்குமோ என்பதும் ஸந்திக்தமே. கேவலம் ஸ்ம்ருத்யுக்த ஆசாரங்களை அநுஷ்டித்து வரும் இதர மதஸ்தர்கள், ஸ்ரீ வைஷ்ணவர்களான நம்மை இதுகாரணமாக அவைதிகர்களென்று இகழ்ந்து பேசுகின்றார்கள். இதைப் பற்றி நமது பெரியோர்களுக்குள் பெரிய சர்ச்சை ஏற்பட்டது; மற்றை சர்ச்சைகள் போல அந்தச் சர்ச்சையும் எவ்வித நிர்ணயத்தையும் பெறாமலே பரஸ்பரம் த்வேஷத்தையும் ஆக்ரஹத்தையும் மாத்ரம் ஜநிப்பித்துவிட்டது.

ப்ரஹ்ம ஸூத்ரத்தில் இது விஷயமாக என்ன சொல்லப்பட்டிருக்கின்றதென்பதும், ஸ்ரீ ஶங்கராசார்யர் ஸ்ரீ ராமாநுஜாசார்யர் இவர்கள் இருவரும் அந்த ஸூத்ரங்களுக்கு எவ்விதம் பாஷ்யம் செய்திருக்கிறார்கள் என்பதும் தனியாக ஒரு வ்யாஸத்தில் விசாரிக்க அர்ஹங்கள். ஆனால், ஒன்றை மாத்ரம் நிராக்ஷேபமாக இவ்விடத்தில் ப்ரஸ்தாவிக்கலாம். ஸூத்ரக்காரர் பாஞ்சராத்ரத்தைக் கண்டிப்பதாக ஸ்ரீஶங்கராசார்யருடைய பாஷ்யம்; 'அவர் அதைக் கண்டிக்கவில்லை; அங்குள்ள நாலு ஸூத்ரங்களுள் முதல் இரண்டால் அதற்குப் பூர்வ பக்ஷத்தைச் செய்துகொண்டு பின்வரும் இரண்டு ஸூத்ரங்களால் அதற்கு ஸமாதாநம் சொல்லியிருக்கிறார்' என்பது ஸ்ரீ ராமாநுஜருடைய பாஷ்யம் என்பதுதான்.

பாஞ்சராத்ரத்தை அவைதிகமென்று மற்றவர்கள் சொன்னபோதிலும், ஸ்ரீ ஶங்கராசார்யர் 'அது ஸூத்ரகாரரால் நிராகரிக்கப்பட்டு நிற்கிறது' என்று நிர்ணயித்தபோதிலும், ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குக்கூட கால

பலத்தால் அதில் விஶ்வாஸக்குறைவு ஜநித்தபோதிலும், அதில் ஶ்லாக்ய மான பாகங்கள் சில இருக்கின்றன என்பதை ஒருவராலும் நிஷேதிக்க ஸாத்யமில்லை. பற்பல தேவதைகளைப் பற்பல பலங்களை உத்தேஶித்து ஆஶ்ரயிப்பதைக் கண்டித்து, 'நாராயணன் ஒருவனே ஆஶ்ரயணீயன்; பதிவ்ரதை பதியினிடத்திற்போல நாம் அவனிடத்தில் ஐகாந்த்யத்தைச் செய்ய வேண்டும்' என்னும் எண்ணத்தை த்ருடப்படுத்தியது பாஞ்சராத்ரமே. 'மோக்ஷம் என்பது சில ஜாதியர்களுக்கு மாத்ரம் தான்; மற்றவர்கள் மோக்ஷம் பெறவேண்டுமானால் அவர்கள் வேறு ஜந்மம் எடுத்து அதிகார விசேஷத்தைப் பெற்றே மோக்ஷத்தை அடையவேண்டும்' என்னும் அல்ப புத்தியை நிராகரித்து, 'எல்லாரும் மோக்ஷத்திற்கு அதிகாரிகளே; பரகதியை அடைவதற்கு ஜந்மம் நிபந்தநமன்று' என்பதை வற்புறுத்தி அநுஷ்டாநபர்யந்தமாகக் கொண்டு வந்தது பாஞ்சராத்ரம்.

"𑌯𑌾𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌿𑌤𑌾𑌂 𑌵𑌾𑌚𑌂 𑌪𑍍𑌰𑌵𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑌃"

இத்யாதியால், ஸ்ரீ கீதையே, பலாபிஸந்தியுடன் செய்யப்படும் வைதிக கர்மங்களைக் கண்டித்திருக்கையிலும், 'ப்ரபலமான ஸாமக்ரீ ஸாத்யமாயுள்ள யாகம் முதலிய கர்மங்களைச் செய்யாவிட்டால் பாதகமில்லை; ஸுகரமாயும் யாகாதிகள் போல பகவத் ப்ரீணநமாயும் இருக்கும் பஞ்சமஹா யஜ்ஞாதிகளைச் செய்தால் போதும்'என்று விதித்து, பாஹ்யோபாஸநமாகிற கர்ம கலாபங்களை அநாதரித்து, அதன் ஸ்தாநத்தில் மாநஸிக உபாஸநத்தை ஸ்தாபித்தது பாஞ்சராத்ரமே. மநுஷ்யனுற் செய்யப்படும் ஒவ்வொரு கர்மத்திலும் பகவத் ஸம்பந்தத்தைப்'புகவிட்டு, ஆயுள்காலம் முழுவதையும் அதனைப் பகவதாராதநமாகப் பரிணமிக்கும்படி செய்வது பாஞ்சராத்ரத்தின் மஹிமையே என்பதை யாராவது ஆக்ஷேபிக்கக் கூடுமோ?

பாஞ்சராத்ர ஸம்பத்தமான ப்ராஹ்ம ஸூத்ரங்களுக்கு ஸ்ரீ சங்கராசார்யரும் ஸ்ரீ ராமாநுஜாசார்யரும் செய்திருக்கும் பாஷ்யங்களைப் பற்றி அடுத்த ஸஞ்சிகையில் விசாரிப்போம்.

—:0:—

ஸ்ரீ:

ச ம ய ம்.

(ஸ்ரீ. திரு. அ. இராமகிருஷ்ணஶடகோபதாஸர்)

(முன்தொடர்ச்சி—பக்கம் 195)

இனி, வியாச பகவான் பிரம சூத்திரத்தைப் பொதுவாகக் கூறிய போதிலும், முன்னமே தாமருளிச்செய்த வேத இதிகாச புராணங்களிலே கூறப்படும் மும்மூர்த்தியர்க்குள் முதல்வரான விஷ்ணு, அம்மை அப்பனாகிய ஸ்ரீமந் நாராயணனே என்பதற்குச் சாட்சியங்கள் அந்நூல்களிலே அதிகமாகக் காணப்படுகின்றமையாலும், ஒரு காலத்தில் ரிஷிகள் எல்லாருங் கூடிக் கொண்டு, 'சுருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களிற் சொல்லப்படும் நிச்சய மான பரம்பொருள் இதுவெனத் தெரிந்த பாடில்லையே' என்று தமக்குள்ளே சந்தேகங் கொண்டவராய், வினைக் குறும்பெல்லாம் அறுத்தெறிந்த உயர்மதி யின ராகிய ஸ்ரீமத் வியாசமா முனிகளைப் பார்த்து, " சுவாமி! சுருதி முதலாய நூல்களின் முடிபு என்னையோ வென்று இடர்ப்படுகின்றேமாதலின், அதனை ஒரே வார்த்தையில் எமக்குத் தெளிவுற உரைத்தருளல் வேண்டும் " என்று பணிந்து கேட்க, அதற்கவர், " யாம் உபசாரமாகப் பல தேவர்களைப் பரம் பொருள் எனக் கூறினேம் ; எனும், சுருதி முதலாய அறிவு நூல்களை யெல் லாம் பன்முறை ஆய்ந்தாலும் தெளியப் பெறுவது ஒரு பொருளே தான் ; அது தான் பரப்பிரமமாகிய நாராயணன் ; சுருதியைவிட வேறே பெரும் பிர மாண நூல் இல்லை ; கேசவனைவிட வேறு தெய்வமில்லை" என்று காசியின் கண்ணே, தமது அருட்கரங்களை உயரத் தூக்கி எல்லா ரிஷிகள் முன்பே சத்தியம் உரைத்து அறுதியிட்டு அருளிய

" ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம் உத்ருத்ய புஜமுச்யதே ।
வேதஶாஸ்த்ராத் பரம் நாஸ்தி ந தைவம் கேஶவாத் பரம் ॥ "

என்ற ஓர் அருமையான சுலோகம்* உலகத்திலே பிரசித்தமா யிருக்கின்ற மையாலும், பிரம சூத்திரமும் திருவாய்மொழி முதல் இரண்டு பத்துக்களும் ஏகார்த்த பிரதி பாதகமென்று சப்தங்களைக் கொண்டே ஐக்கிய கண்டப்படு த்தி யிருக்கின்றமையாலும், பிரம சூத்திரத்தில் உய்த்துணர வைத்திருக்

* இந்த வரலாற்றை ஸ்ரீமத் அரிதாசர் தமது இருசமய விளக்கம், உத்தர காண் டம், வைதிக திருவாராதனைப்படலம், வேதவியாசர் சத்தியபரிச்சேதம் 4, 5-ம் செய்யுள் களில் விளங்க உரைத்திருக்கின்றார். ஆண்டுக் காண்க. " வியாசர் அங்ஙனம் மொழிந்

கும் முடிவான பரம்பொருள் ஸ்ரீமந் நாராயணன் என்பதே ஸ்ரீ வியாச முனிகளது திருவுள்ளக் கருத்தாம். விரிப்பின் பெருகும். [இவ் வுண்மை கண்டு மனம் பொறுது புழுங்கியதால் அன்றே, சைவ மதவாதியர், நாராயண பதம் சிவப்பொருள் தருகின்றதென வாதித்தும், தங்கள் நினைவு கைகூடப் பெறுராய்ச் சென்றொழிந்தனர். சிலபலர், 'நவகோடீயம்' என்ற சிறு சுவடி மூலமாய் நாராயண பதம் சிவமேயாகும் என்று மீண்டுங் காட்டவே, அச்சுவடிக்கு மறுப்பு நூலாக 'தசகோடீயம்'† என்ற நூல் எழுதப்பட்டு, நாராயண பதம் சிவப்பொருள் தாராது என்று நாட்டப்பட்டது.]

இங்ஙனமாக வேதோபநிஷத் சாஸ்திரங்களிலே பிரதிபாதிக்கப்படுகின்ற பரம்பொருள் ஸ்ரீமந்நாராயணக் கடவுளே என்று பிரமசூத்திரத்திலே சூட்சுமமாக உய்த்துணர வைக்கப்பட்டிருக்கும் ரீதியை நன்குணர்ந்த ஆசிரியர்—இராமாநுஜாசாரியர், அச் சூத்திரங்களுக்குச் சிறந்ததொரு பாடியத்தை, இறைவன் நாராயணனே என்றும், ஆன்மாக்கள் பலவென்றும், அவை கடவுளினின்றும் வேறுபட்டவை என்றும், உலகங்கள் தோற்றமன்று உண்மை யென்றும், ஆக உலகம் உயிர் இறைவன் எனப்படும் மூவகைப் பொருள்களும் எப்பொழுதும் உளவென்றும், உலகக் கட்டினின்றும் நீங்கி இறைவனை உயிர்கள் அடைந்துய்வது பக்தி யொன்றினல் மட்டுமே என்றும் ஆய தமது விசிஷ்டாத்துவித தத்துவக் கோள்கையை இட்டு விரிவாகவும் விசத மாகவும் எழுதி யருளினர். அதனலன்றே அவருக்கு 'ஸ்ரீபாஷியகாரர்' என்ற திருநாமம் சிறப்புப் பெயராக வந்தது.

இனித் திருவள்ளுவர், தமது கொள்கைக்கு எடுத்துக் காட்டுகளாக உள்ள வடமொழி தென்மொழி நூல்களை யோதி, அந்நாராயணக் கடவுள் அம்மை அப்பனுய் விளங்குகின்ற தன்மையை உணர்ந்துகொள்ளுதற்கே,

---

தது தவறு; அதனால்தான் அவருக்குப் புஜஸ்தம்பனம் உண்டாயிற்று" என்ற பொருளமைய, வடநூற் கடலை நிலைகண் டுணர்ந்த சிவஞானமுனிவர், தமது காஞ்சிப் புராணத்திலே,

"நந்தி யெம்பிரான்வெகுண்டு நாண் மலர்க்கர மெடுத்த
வந்த வண்ணமே யசைவற நிற்குமா சபிப்ப
மந்த ணுயின நிமிர்த்தகை மடக்கவல் லாமை
நிந்தை யார்சிலைத் தூணமொத் தசைவற நின்றான்"—(சார்ந்தா சயப்படலம்; செய்யுள் 13.) என்று கூறினால் என்பரேல், அரிதாச ஸ்வாமிகள், அதே பரிச்சேதத்தில், இவ் விஷயத்தை எதிர் மறுத்துத் தள்ளினமை 9 முதல் 14 செய்யுள்களால் அறிக.

† இவ் வெதிர்மறுப்பு நூலுக்கு மறுப்புரை வெளிவந்திலது.

அவர் அக்கடவுளுக்கு, தொடக்கத்திலே 'ஆதிபகவன்' என்று பெயரிட்டுத் திருக்குறளை இயற்றுவதற்காக, முதற்குறளில்,

*"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

என்றார். 'ஆதிபகவன்', 'அம்மையப்பன்', 'ஸ்ரீயப்பதி', 'ஸ்ரீ காந்தன்', 'ஸ்ரீமந் நாராயணன்' எல்லாம் ஒரே பொருளைக் குறித்துவரும் தொடர்மொழிகளாம். 'ஆதிபகவன்' என்னுஞ் சொற்றொடர், ஸ்ரீமந் நாராயணனையே குறிக்கின்றதென்பது, பிரபல பிரமாணங்களைக்கொண்டு வாதம் புரிந்து முன்னமே சில பெரியோர்களால் நிறுவப்பட்டுளது. [விரிப்பின் பெருகும்.] இம்முதற் குறளால் ஆசிரியர்—திருவள்ளுவர், ஸ்ரீமந் நாராயணனுடைய ஸர்வஜகத் காரணத்துவத்தை நிலை நாட்டிப் பின்பு,

†"மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
றாஅய தெல்லா மொருங்கு"

என்னுங் குறளால் அவன்றன் காத்தல் தொழிலைக் கூறி, அதன்பின்,

‡"தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொல்
தாமரைக் கண்ணா னுலகு.

என்ற குறளால், அப்பரம்பொருளே 'மோக்ஷப்ரதன்' என்று உய்த்துணர வைத்துள்ளார். இவ்வாறாகத் திருவள்ளுவனாருடைய திருவுள்ளக் கருத்து, ஸ்ரீமத் வியாசமாமுனிகளுடைய திருவுள்ளக் கருத்தோடு ஒன்றி நிற்கின்றவற்றைக் காண்க.

இவ்விரு நூல்களுக்கும் விருத்தியுரை செய்தருளியவர்களாகிய இராமாநுஜாசாரியரும் பரிமேலழகனாரும் வைணவப் பெரியோர்களாய்த் துலங்கினமையும் உணர்க. பரிமேலழகர் இருகலையிலும் நுண்ணிய ஆராய்ச்சி உடையோராய் விளங்கித் திருக்குறளுக்கு உரை செய்த காரணத்தையும், அவ்வாறே இராமாநுஜரும் ஆராய்ச்சி யுடையோராய், நீலகண்ட சங்கர மத்வ ஆசாரியன்மார்போல் அல்லாது, தமிழ் வேதங்களாகிய ஆழ்வார் அருளிச்செயல்களையும் உடன்போற்றி வேதாந்த சூத்திரங்களுக்கு விசிஷ்டாத்து

* திருக்குறள் அறத்துப்பால் முதல் அதி: முதற்குறள்.
† ,, பொருட்பால் 61-ம் அதி: 10-ம் குறள்.
இவற்றின் பொருள்களைப் பின்னே கூறுகிறேம்.
‡ திருக்குறள், காமத்துப்பால் 111-ஆம் அதி: 3-ம்குறள்.

வித நுண்மைப் பெரும்பொருள் அமைய பாஷியஞ் செய்த காரணத்தையும், நடுவு நிலைமையோடு உற்றுநோக்கும் போழ்தெல்லாம், போது நூற்களாகிய இவ்விரு நூற்களைக்கொண்டு உலகோர் தமது சந்தேகத்தைத் தீர்த்துத் தெளிவடைந்து உண்மை அறியவேண்டியது என்றே கொள்ளக்கிடக்கின்றது.

முனிவர் பெருமானாகிய வியாசபகவான், வேதோபநிஷத்துக்களிலே இலைமறைகாய் போன்று மறைந்துள்ள இந்நுட்பங்களை யெல்லாம், மனிதர்கள் சுத்தமான அறிவை அடையவேண்டியே உய்த்துணருமாறு வைத்தும் அவர்கள் அறியாராய் மயங்க, இறைவனது அருள்நிரம்பிய ஆழ்வார்கள் அவதரித்து, யாவரும் தெளிவாக உணரும்பொருட்டே இறைவன்மேல் வேதசாரமாகிய பாடல்களைப் பாடி யருளினார்கள். அருளியும், மக்கள் மீண்டும் இடர்ப்படுதல் கண்டு சகிக்காதவராய், ஸ்ரீபாஷ்ய கர்த்தாவாகிய ஸ்ரீமத் ராமாநுஜாசாரியர், வைஷ்ணவமதத்தை இத்தென்னாடெங்கணும் வேரூற நிலைநாட்டி, ஸ்ரீ பாஷ்யம் வேதார்த்த சங்கிரகம் பகவத்கீதை வியாக்கியானம் முதலிய சமய கிரந்தங்களை அருளிச்செய்து உலகை வாழ்வித்தருளினார்.

ஸ்தாலிபுலாக நியாயப்படி இவர் இவ்வாறு கூறிவந்தது கொண்டு, இறைவன் நாராயணன் என்றும், அவனை வழிபடும் ஒழுக்கமே வைஷ்ணவம் என்றும், அவ்வைஷ்ணவமே பரமவைதிக சமயமென்றும் அறிந்துகொள்க. ஸ்ரீ வைஷ்ணவ மதத்தின் சுத்தசத்துவ வைதிகத் தன்மைகளை எல்லாம், ஸ்ரீ பாஷியம், திருமந்திர வியாக்யானங்கள், ஸ்ரீ வசனபூஷணம், தத்வசேகரம், ஸ்ரீமத் ரகஸ்யத்ரய ஸாரம், ஸ்ரீ வைஷ்ணவ சமயாசார நிஷ்கர்ஷம் முதலிய ஆராய்ச்சி நூல்களையும், மற்றும் சுருதி முதலிய பெருநூற்களையும் கண்டு தெளிக. ஆக வைஷ்ணவம் வேதவேதாந்தங்கள் பிரமசூத்திரம் புராணேதிகாசங்கள் முதலிய இன்னோரன்ன நூல்கள் சார்பிலே நின்று பொலிவுறுகின்றதென்க.

அப்படியானால், 'மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்' என்னும் நூலுடையார், வேதம் பொய் என்றும், அது சிற்றறிவுடைய மக்களால் வேள்வி முதலாய சிறு தொழில்கள் நிமித்தம் செய்யப்பட்டதென்றும், ஆசிரியர் சுய நலமும் தமக்குப் புகழும் வேண்டியே வேத முதலாய நூல்களை எழுதிவைத்தனர் என்றும் கூறி, திருமந்திரம் சிவஞானபோதம் சிவஞான சித்தியார் முதலிய நூல்களே பெருஞ்சான்று நூல்களாம் என்றும், அவை தம்மாற் பெறப்படுகின்ற சைவசமயமே சமயம் என்றும் மொழிந்தாரால் என்பரேல்: அவர், தம்மதச் சார்பிலே நின்று நடு நோக்காது தமக்கும் தங்கொள்கைக்கும் வேண்டியவை எவையோ, அவைகளைக் கொண்டு தம்முடைய மதத்தை நாட்டுதலாலும், வைணவம் வேதத்துட் பெறப்படுகின்றமையின்,

அவ்வுண்மையை மறைக்கவேண்டி அங்ஙனம் கூறினமையாலும், திருமந்திரம் முதலிய நூல்கள் பொதுவாகாமையாலும், ஆன்மாக்களது அறிவுக்கு ஏற்றவாறும், அவை தம்மை நல்வழிப்படுத்துமாறு வேண்டியே, தேவர்கள் பலரை வெறும் உபசாரமாகக் கூறித் *தூலாருந்ததி நியாயமாகக் காட்டி, ரிக்கு முதலிய வேதங்கள் பொதுவாகவும், பக்குவ ஆன்மாக்களின் பொருட்டு வேதாந்த சூத்திரம் சிறப்பாகவும் செய்யப் பட்டமையாலும், வேதோபநிஷத்துகள் முதலியவற்றை நுட்பமாக அறிந்து கொள்ளுஞ் சக்தி அமையாத ஏழைப் பாமரர்கட்குப் புலப்படும் சிலச் சில சிறு வாசகங்களைக் கொண்டு பொதுநூலாகிய பிரம சூத்திரத்தையும் ஒரு பொருட்படுத்தாமல் தமக்குத் தோன்றியவாறெல்லாம் உரை உரைக்கின்றமையாலும், அவருரை நடுநிலை திறம்பிய போலியுரை யென்றே ஒழிக்கற்பாலதாம்.

அஃதொக்கும்: 'ஆனால் நீவிர் கூறும் உபநிடதங்கள் பிரம சூத்திரங்கள் முதலியவை தமிழ்ச் சான்றோர்களாலே எழுதப்பட்டன; ஆரியர்கள், தமிழர்கள் இடமிருந்தே எல்லாங் கற்றனர்' என்பரேல், இவர் இங்ஙனங் கூறவந்தது எச்சான்று கொண்டென்க? 'அது கேள்வியாகாது: அகச்சான்று புறச்சான்றுகளைக் கொண்டு நுனித்தறியும் வல்லமை வாய்ந்தோர்களாகிய ஆங்கில உரைகாரர்கள் எல்லாம், தமிழாரியர்களது பழமைய நிலைமையை நன்காய்ந்து உணர்த்துகின்றன ராதலால், யாம் கூறியது உண்மையே' என்பரேல்: இந்திய நூல்களின் உட்பொருள் எல்லாம், பழைய காலந் தொட்டே பரம்பரையாக வந்த இந்தியப் பெருமக்களுக்கே அன்றி ஏனையோர்க்கு எள்ளளவும் தெளிவாகப் புலப்படாது; உட்கருத்து உண்மை யறியாமல் அவ்வச் சமயினர் கூறியவற்றையே பெரிதும் நம்பி, அரிய பெரிய நூற்களை எல்லாம் மேற்பூச்சாக அவ்வாங்கில பண்டிதர்கள் மொழிபெயர்த்து விடுகின்றார்கள்; மொழி பெயர்த்த நூற்களைக் கற்றே இப்போதையர் (Modern thinkers) மயங்கி இடர்ப் படுகின்றனர்; படவே நூல்களின் பழமை முதற் றன்மை (Originality) குன்றிப் புதுத் தன்மைக் கிளர்ச்சி (New-form of Way) உண்டாகவே, அதற்கேற்ப அந்நூல்களைப் பயிலுவோர், பழைய நூல்களில் உள்ள அரும்பெரும் பொருள்களை ஒருவிதத்திலும் அறியாராகித் தமக்கு வேண்டியவா றெல்லாங் கூறி விடுகின்றமையால், உட்கருத்து அமையாமற் கூறும் அவர் உரைகள் போதிய சாட்சியங்கள் ஆகாவெனக் கடைப்பிடிக்க. உட்கருத்து உண்மை அமைய வேதோபநிஷத்துக்கள் மொழி பெயர்க்கப்படுமாயின், அங்ஙனம் மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள் ஆராய்ச்சி உரைகள் முதலியவை எம்மொழிக் கண்ணவாயினும் எம்மனோரார் போற்றப்படுவனவாம். பழைய காலம் இன்ன தன்மையாய் இருந்தது எனத் துணிந்து கூற இன்னமும் இயலவில்லை என்றால், தமக்குத் தோன்றிய

* இதன் விவரத்தைப் பின்னே காட்டுதும்.

ஒரு சில விஷயங்களைக் கொண்டே ஒன்றினை நிரூபிக்க முன்வருதல் யாங்ஙனமென மறுக்க. அவர் இம்மட்டில் அமைந்தனரோ என்னில், வைணவ சமயத்தைப் பற்றியேனும், ஆழ்வார்களைப் பற்றியேனும், கடவுள் அவதாரங்களைப் பற்றியேனும் கூற நேரும்போதெல்லாம் தம்மை மறந்து தமக்குத் தோன்றியவாறெல்லாம் கூறிவிடுகின்றனர். மற்றும், திருவாய்மொழிக்கே என்று ஏற்பட்ட வியாக்கியானங்கள் பலவற்றையும் பயின்ற பிற்பாடே உறுதிகூற அமையாது, சிற்சில செய்யுள்கட்குத் தமக்குத் தோன்றிய உரைகளை வரைந்தாராதலின் அவருரை ஏலாமையுங் கொண்டு கொள்க. (பின்னே சில காட்டுதும்.) எனவே செவ்விய ஆராய்ச்சி பாற்படாத பிறர் உரைகளைக் கண்டு மயங்கற்க.

ஆயவாற்றான், சமய நூற் பிரமாணங் கொள்ளாமல் பொது நூற் பிரமாணங் கொண்டு ஆராயுமிடத்துச் சமயங்கள் எல்லாவற்றிற்கும் வைஷ்ணவ சமயமே எல்லா ஒழுக்கங்களையும் (இகமும் பரமும்) சந்தேக விபரீத மற ஓதி உண்மைப் பெரும் பொருளை ஆராய்வதற்கு இடந்தருகின்ற பரமவைதிக சமயம் என்று உணரற்பாற்றும். ஆகவே, கண்ணெதிரே தோன்றும்படியான உலகத்தைக் கொண்டே அறிவுபெற்று, நமது ஸ்தூல கட்புலனுக்குத் தோன்றாத கடவுள் உண்டென உணர்ந்து, அக்கடவுள், தனது கருணை நிரம்பிய திருவிளையாடலால் தோற்றுவித்த ஆன்ம கூட்டங்கள் அளவிறந்தன என்பதும், அவைகள் வாழும் உலகங்கள் பல வென்பதும், உலகங்களும் உயிர்களும் இறைவனுமாகிய முப்பொருள்களும் எக்காலத்தும் உளவென்பதும், முன்னைய இரண்டும் பின்னைய முழுப் பொருளினின்றும் தோன்றுவனவும் மறைவனவுமாய காலசக்கரச் சுழற்சி, அப்பொருளின் அபார சக்தியால் நடைபெறுவது என்பதும், உயிர்கள் பிறந்து இறந்து உழலாமல் உணர்வுபெற்று அவ்விறைவனை அடைதலே நிலையுற்ற பெரும்பேறு என்பதும், ஆகிய நுண்மையான தத்துவங்களைத் தெளிவாக ஆராய்ந்து கூறும் விசிஷ்டாத்துவித பரமவைதிக வைணவ சமயமே ஆத்மாக்களுக்குச் சர்வோத்கிருஷ்டமாய் உயர்நலம் அளிக்கும் ஒழுகலாறுகள் அமையப்பெற்ற சமயம் என்று தெளிவாக உணர்தற்பாற்று.

'சமயம்' என்னுங் கட்டுரைகொண்டு பொதுவாக நோக்கிய வைஷ்ணவ சமயத்தை, இனிச் சிறப்பாக 'ஐம்பொருள் தத்துவ ஆராய்ச்சி' என்னும் இரண்டாம் பகுதியில் பரக்கக் கூறுவாம்.

திருக்குருகூரடிகள் திருவடி வாழ்க.

முதற்பகுதி முற்றும்.

80

ஸ்ரீ:

அந்த்ய கால ஸ்ம்ருதி.

("Annals of the Bhandarkar Institute" என்னும் பத்ரிகையி லிருந்து ஸங்க்ரஹித்து எழுதப்பட்டது.)

ப்ராங்க்ளின் எட்கர்டன் (Franklin Edgerton, Yale University) என்னும் ஒரு அமெரிகா தேசத்திய வித்வாந், மரணமடையும் ஒரு மநுஷ்யனுடைய வரும் ஜந்மத்திற்கும் அவனுடைய அந்த்ய ஸ்ம்ருதிக்குமுள்ள ஸம்பந்தத்தைப்பற்றி லோகத்திலுள்ள மதங்கள் என்னசொல்லுகின்றன என்பதை ஒரு வ்யாஸத்தில் ஸமக்ரமாக விசாரித்திருக்கிறார். அது விஷயமாக நமது மதத்தின் ஸித்தாந்தம் என்ன என்பது நமக்கு வ்யக்தமாகத் தெரிந்திருந்த போதிலும், மற்றை மதங்களின் ஸித்தாந்தத்தைத் தெரிந்துகொள்வதில் நமது அபிமாநிகளுக்கு உத்ஸாஹம் இருக்குமென்று எண்ணி, அந்தப் பாச்சாத்யர் செய்துள்ள விசாரத்தை ஸங்க்ரஹித்து எழுதுகின்றோம்.

முதலில், ஹிந்து மதத்தில் சொல்லப்பட் டிருப்பதாக அவர் எழுதி இருப்பது:—ஒருவனுக்கு அடுத்துவரும் ஜந்மம் அந்த்ய காலத்தில் அவனுக்கு ஸம்பவிக்கும் ஸ்ம்ருதியைச் சார்ந்தது என்று ஹிந்துக்கள் த்ருடமாக நம்பி இருக்கிறார்கள். சில இடங்களில், மரணமடையும் காலமும் ஸ்தலமும் கூட அதன் நிர்ணாயகங்களாகின்றன என்பது அவர்களுடைய அபிப்ராயம். இந்த நம்பிக்கைக்கு ஆதாரம் எது என்பதை விசாரிக்கும் பொழுது, வேத ஸம்ஹிதைகளில் ஒன்றும் தென்படவில்லை. ப்ராஹ்மணங்களுள் ஶதபத ப்ராஹ்மணத்தில்,

"அத² க²லு க்ரதுமயோ(அ)யம் புருஷ: ஸ யாவத்க்ரதுரயம்
அஸ்மால்லோகாத் ப்ரைதி ஏவம் க்ரதுர்ஹாமும் லோகம்
ப்ரேத்யாபி⁴ஸம்ப⁴வதி"

[இந்த ஜீவன் க்ரதுமயன்; மரணகாலத்தில் அவனுடைய க்ரது இருப்பதற்குத் தகுந்ததுபோல, மரணத்திற்குப் பிறகு அவனுக்கு ஜந்மம் நேர்கின்றது] என்னும் வாக்யம் காணப்படுகின்றது. இவ்விடத்தில் 'க்ரது' என்பதற்கு 'நிஶ்சயம்' 'அத்யவஸாயம்' என்பது பொருள் என்று வ்யாக்யாநம் செய்யப்பட்டிருக்கின்றது. உபநிஷத்திலும் இதைப் பற்றிய ப்ரஸ்தாவம் தென்படுகின்றது,

“तेजो ह वा उदानः; तस्मादुपशान्ततेजाः पुनर्भव
मिन्द्रियै र्मनसि सम्पद्यमानैः यच्चित्तस्तेन स प्राणमायाति;
प्राणस्तेजसा युक्तः सहात्मना यथा सङ्कल्पितं लोकं नयति”

இதன் பொருள் வ்யக்தமாக ஏற்படாவிடினும், அந்த்யகால அத்யவஸாயத்தையும் அதற்கு அநுகுணமாக அடுத்த ஜந்ம ப்ராப்தி ஸம்பவிப்பதையும் பற்றியே அது ப்ரஸ்தாவிக்கின்றது என்பது ஸாமாந்யமாக அறியப்படக் கூடும்.

ஹிந்துமத க்ரந்தங்களில் இந்த ஸ்ம்ருதி பெரும்பாலும் மோக்ஷ ஸம்பந்தமாக ப்ரஸ்தாவிக்கப் பட்டிருக்கின்றது. ப்ராண வியோக காலத்தில் ஒருவன் பகவானை த்யாநித்துக் கொண்டாவது பகவந்நாமத்தை ஸங்கீர்த்தநம் செய்துகொண்டாவது ப்ராணனை த்யஜித்தால், அவனுக்கு மோக்ஷ ப்ராப்தி நிஶ்சயமென்று அந்த க்ரந்தங்கள் சொல்லுகின்றன. ஸ்ரீ பகவத் கீதையில்,

“अन्तकाले च मामेव स्मरन्मुक्त्वा कलेबरम्।
यः प्रयाति स मद्भावं याति नास्त्यत्र संशयः॥”

[ப்ராணத்தை த்யஜிக்கும் பொழுது எவனொருவன் என்னையே நினைத்துக்கொண்டிருக்கிறானோ, அவன் நிச்சயம் என்னுடைய ஸ்வபாவத்தையே அடைகிறான்] என்று சொல்லப்பட்டிருக்கிறது.

“मरण समये यादृशी मतिः स्यात्तादृशी गतिः स्यात्”

என்பது ஒரு ஜைநமதஸ்தருடைய வாக்யம்.

மரணகாலத்தில் ஒருவனுக்கு நிச்சயரூபமான அத்யவஸாயம் இல்லாவிடினும், சில இடங்களில் ஆகஸ்மிகமாக ஸம்பவிக்கும் எண்ணமும் வரப்போகும் ஜந்மத்தை நிர்ணயிக்கிறது என்று சில உபாக்யாநங்களிலிருந்து அறிகிறோம். ஒரு இடத்தில் ஒரு பதியும் பத்நியும் அக்நி ப்ரவேசம் செய்யப்போகும் பொழுது அகஸ்மாத்தாக அப்பொழுது உயரப் பறந்துக் கொண்டிருந்த ஹம்ஸ தம்பதிகளைப் பார்த்துக்கொண்டே அவர்கள் ப்ராணத்யாகம் செய்ததால், அவர்கள் மறு ஜந்மத்தில் ஹம்ஸங்களாகப் பிறந்ததாகவும் ஒரு கதை உண்டு.

“यया बुद्ध्या प्रतिसंवत्त्या वियोगे देहजीवयोः।
सतो निविशते यत्र तमेवांशं याति तदाकृतिम्॥”

[ப்ராண வியோகம் நேரும் காலத்தில், ஸமீபத்தில் இருக்கும் வஸ்துக்களைப் பார்த்து அவைகளில் ப்ரவ்ருத்தித்த மநஸ்ஸை உடையவனுக ஒருவன் ப்ராணனை த்யஜித்தால், அவன் அந்த வஸ்துவாகவே மறு ஜன்மத்தை அடைகிறுன்] என்பது அந்த உபாக்யாநத்தின் கடைசி ச்லோகம். அதாவது- மநஸ்ஸில் இச்சை ஜநிக்காவிட்டாலும், கேவலம் அநுஸந்தாநத்தால் மாத்ரம் அவ்வித பரிணுமம் ஸம்பவித்துவிடும் என்பது கருத்து. அநுஸந்தாநத்துடன் இச்சையும் தீவ்ரமாக இருக்கும் பக்ஷத்தில் அந்தப் பரிணுமம் ஏற்படும் என்பது நிச்சயமன்றோ ?

“யத்ர யத்ர ம்ரியதே ஜந்துஸ் தத்ர தத்ரைவ ஜாயதே”

[எந்த வஸ்துவில் தீவ்ரமான இச்சையுடன் மரணத்தை அடைகிறுனே அந்த வஸ்துவாகவே அவன் திரும்பவும் பிறக்கிறுன்]. இது ஹிந்துக்களுடைய ஸித்தாந்தம் என்பது அவர்களால் ஆதரிக்கப்பட்டுவரும் அநேக க்ரந்தங்களிலிருந்து விளங்கும்.

ஜநங்களுக்குள் வழங்கிவரும் கதைகளைப் பரிசீலநம் செய்தாலும், அந்த்யகாலத்தில் ஒருவனுல் கொள்ளப்படும் தீவ்ரமான இச்சை அடுத்த ஜந்மத்தில் அவனுக்கு நிச்சயம் நிறைவேறுகின்றது என்பது ஹிந்துக்களின் ஸித்தாந்தம் என்பது ஏற்படும். ஹிந்து மதத்தில், மநஸ்ஸின் உறுதிக்கு எல்லையற்ற ப்ராபல்யம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அபேக்ஷிதமான உறுதி மாத்ரம் ஒருவனுக்கு இருந்தால், அவனுக்கு அஸாத்யமான கார்யம் ஒன்று உண்டு என்பதே இல்லை. ஜர்மனி தேசத்திய ஸ்கோபன்ஹோர் (Schopenhauer) என்னும் வித்வாந் ஹிந்து மதத்தைக் கொண்டாடினதற்கு முக்யமான காரணம், ஹிந்துக்கள் அத்யவஸாயத்துக்கு அங்கீகரிக்கும் ப்ராபல்யமே.

லோகத்தில், நாயக நாயகிகள் இந்த ஜந்மத்தில் தமது ஆசை பங்கமாகவே அடுத்த ஜந்மத்திலாவது அந்த ஆசை நிறைவேறவேண்டுமென்னும் எண்ணத்துடன் ஆத்ம ஹநநம் செய்துகொள்வதை நாம் கதைகளில் படித்திருக்கிறோம். ஆத்ம ஹநநம் செய்துகொள்ளத் தீர்மானிப்பதே ஆசையின் உத்கடத்தன்மையைக் காண்பிக்கின்றது. ஆகையால், அந்த ஆசை நிறைவேறவேண்டும் என்பதில் ஸந்தேஹமே இல்லை. இதற்கு நிதர்சநமாக ஒரு விசித்ர கதை உண்டு. ஒரு அரசனுடைய அரண்மனையில் ஒரு வ்ருத்த ப்ராஹ்மணன், அரசனுக்கு அதிமாத்ரம் ஸுஹ்ருத்தாக வர்த்தித்து வந்தான், அவனுக்கு ப்ராணவியோக காலம் ஸமீபித்தது. அப்பொழுது அந்த அரசனுடைய மந்த்ரீ அரசனுக்கு ஒரு தத்வத்தை விளக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன், மரித்துக்கொண்டிருக்கும் ப்ராஹ்மணன் பார்

ஷைக்குப் புலப்படும்படி உத்தமமான ஒரு பழத்தை எதிரில் வைக்கும்படி அரசனைக் கேட்டுக் கொண்டான். அரசனும் அதற்கு இணங்கி, ஒரு சிறந்த பழத்தைத் தருவித்து ப்ராஹ்மணன் முன்னிலையில் வைக்க, அந்த ப்ராஹ்மணன் அந்தப் பழத்தின்மீது மிகுந்த அபிநிவேசங்கொண்டு அதைத் தனக்குத் தரும்படி கேட்டான். அப்போது அரசன் மந்த்ரியினால் தடுக்கப் பட்டவனாய் அதை அவனுக்குக்கொடுக்க மறுத்தான். ப்ராஹ்மணனும் அந்தப் பலத்தை அடுத்த ஜன்மத்திலாவது புஜிக்கவேண்டுமென்னும் உறுதியான எண்ணத்துடன் ப்ராணனை த்யஜித்தான். ப்ராஹ்மணன் மரித்த மறுதினம் மந்த்ரி அந்தப் பலத்தை, அரசன் முன்னிலையில் கொணர்ந்து வைக்க அதனுள் பெரிய புழு ரூபமான ஒரு ஜந்து அந்தப்பழத்தைப் புஜித்திருப்பதை எல்லாரும் பார்த்தார்கள். ப்ராஹ்மணனே, தனது அத்யவஸாயத்தின் பலத்தால் அந்தப் புழு ரூபமாகப் பரிணமித்து அந்தப் பழத்தைப் புஜிக்கவந்தான் என்பதை அரசன் மந்த்ரியிடமிருந்து தெரிந்துகொண்டு மிக்க வியப்படைந்தானும்.

ஜைநமதத்தில் இந்தத் தீவ்ர அத்யவஸாயத்திற்கு 'நிதாநம்' என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஹிந்து மதத்திற் போலவே ஜைநமதத்திலும் இந்த இச்சையின் ஸாபல்யம் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றது. இம்மாதிரி ஐஹிக பலங்களில் அபிநிவேசத்தைச் செய்வதும், அதன் பூர்த்திக்காகத் தீவ்ரமான அத்யவஸாயத்தைச் செய்வதும் மோக்ஷமார்க்கத்திற்கு விருத்தங்களாகும். அதைப் பெரியதொரு பாபமாகவே பாவிக்கிறார்கள் ஜைநமதஸ்தரும். அது தபஸ்வின் விக்ரயமாம். " 𑌤𑍃𑌣𑍇𑌨𑍈𑌵 𑌸 𑌮𑌾𑌣𑌿𑌕𑍍𑌯𑌂 𑌵𑌿𑌕𑍍𑌰𑍀𑌣𑍀𑌤𑍇 𑌹𑌤𑌸𑍍𑌤𑌵𑌃 " [அல்ப வஸ்துவுக்காக மாணிக்கத்தை விற்பது போலவாம் நிதாநமென்பது.] தீர்த்தங்கரரிடத்தில் பக்தியை அபேக்ஷித்த இந்த்ரன், அதற்காக நிதாநம் செய்ததாகவும், அப்பொழுது இவ்விதம் சொன்னதாகவும் சொல்லுகிறார்கள்.

" 𑌨𑌿𑌦𑌾𑌨𑌂 𑌦𑍇𑌵 𑌬𑌧𑍍𑌨𑌾𑌮𑌿 𑌨𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌮𑌪𑌿 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿 ।
𑌤𑍍𑌵𑌦𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑌯𑌂 𑌚𑍈𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌯𑌿 𑌭𑌕𑍍𑌤𑌿𑌨𑌿𑌬𑌨𑍍𑌧𑌨𑌾 ॥ "

[ஹேதேவ! நிஷித்தமாக இருந்தாலும் நான் நிதாநத்தைச் செய்கிறேன். ஆனால், அது உம்முடைய தர்சநத்திற்காகவும் உம்மிடத்தில் பக்திக்காகவுமே செய்யப்படுகிறது]. இந்த நிதாநத்தை அந்த்ய காலத்தில்தான் செய்ய வேண்டுமென்றும் நிர்பந்தமில்லை. ஆனால், நிதாநம் நிறைவேற வேண்டுமானால் அது மரண பர்யந்தம் அநுவ்ருத்தித்து இருக்கவேண்டுமாம். அதுமாத்ரம் இல்லாமல், அந்த மநோரத ஸித்திக்கு அநுரூபமான பூர்வ ஸுக்ருதமும் அபேக்ஷிதமாம். பௌத்தர்களுக்குள் இதே மாதிரி 'ப்ராணி

தாநம்' என்று ஒன்று உண்டு. ப்ராயேண போதிஸத்வனுக ஆகும் பொருட்டே இந்த ப்ரணிதாநம் பௌத்தர்களாற் செய்யப்படுகிறது. ஜன்மாந்தரத்திலேயே இதன் பரிபூர்த்தி ஏற்படுகின்றது என்றும், அந்தப் பரிபூர்த்தியும் பூர்வ ஸுக்ருதாதீநமென்றும் அவர்கள் சொல்லுகிறார்கள்.

பௌத்தர்களுக்குள், ஒரு கொள்கை உண்டு. அதாவது, ப்ராண வியோக காலத்தில், மரிக்கிறவனுடைய பூர்வ ஸுக்ருத துஷ்க்ருதங்களெல்லாம் மூர்த்தீகரித்து அவனுடைய முன்னிலையில் வந்து நிற்கின்றனவென்றும், அந்தக்காலத்தில் அவன் தனது புத்தியினாலோ ஸமீபத்தில் இருப்பவர்களுடைய உபதேசத்தினாலோ துஷ்க்ருத பலத்தை நிராகரித்து, ஸுக்ருதங்களுக்கு அநுகுணமாக நல்ல ஜன்மத்தைத் தேடிக்கொள்ளலாமென்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். இதனால், அந்த்ய காலத்து மனோபாவத்துக்கு அவர்கள் ப்ராதாந்யம் கொடுக்கிறார்களென்பது வ்யக்தமாகின்றது. ப்ராண வியோகமடையும் மனிதர்களின் ஸமீபத்தில் அவர்கள் இருந்துகொண்டு அவனுடைய மனோபாவத்தை அஸன்மார்க்கத்தில் ப்ரவ்ருத்தியாமல் பாதுகாத்து வருவதைப் பார்க்கலாம்.

கிறிஸ்தவ மதத்திலும், மரண காலத்திலுள்ள சித்த வ்ருத்தி, ஆமுஷ்மிக பலத்தை நிர்ணயிப்பதில் ப்ரதாந ஹேதுவென்றே கொண்டாடப் படுகின்றது. ஒருவன் எவ்வளவு துராசாரனுக இருந்தபோதிலும், அவன் மரண காலத்தில் அவன் பகவானை நினைத்துக்கொண்டாவது, பகவானுடைய பெயரைச் சொல்லிக் கொண்டாவது மரணமடையும் பக்ஷத்தில், அவன்மீது பகவான் க்ருபை செய்கிறான் என்பது அவர்கள் கொள்கை. ஹாம்லெட் **(Hamlet)** என்னும் நாடகத்தில், ஹாம்லெட், தன்னுடைய பிதாவைக் கொன்ற தனது பித்ருவ்யனை, அவன் பகவானைக் குறித்து ஜபம் செய்துகொண்டிருக்கும் காலத்தில் கொல்லக்கூடாது என்று நிவ்ருத்தி செய்ததற்குக் காரணம் முழுவதும், அந்தக் காலத்தில் மரணம் நேர்ந்தால் அந்தப் பாபிக்கும் நல்ல கதி கிடைத்து விடும் என்னும் பீதியே. தனது தகப்பனர் அம்மாதிரி காலத்தில் மரணம் அடையாததால் அவர் துர்க்கதியை அடைந்து சிரமப்படுகிற படியால், அவரைக் கொன்ற இந்தப் பாபியும் அம்மாதிரியே வருந்த வேண்டும் என்னும் எண்ணமே ஹாம்லெட்டை அப்பொழுது அவனைக் கொல்வதிலிருந்து நிவ்ருத்தி செய்தது. இந்தக் காலத்திலும் அவ்விதம் நினைக்கும் அநேக கிறிஸ்தவர்கள் உண்டு. ஸாமாந்யமாக, 'மரணத்திற்குப் பிறகு ஒருவனுக்கு நேரும் நல்ல கதியோ துர்க்கதியோ, அவனுடைய நன்னடத்தை துர்நடத்தைகளைச் சார்ந்தது' என்றே அவர்கள் ஸித்தாந்தம் செய்திருந்த போதிலும், மரண காலத்திய மனோபாவங்களால் அவனுக்கு ஆநுகூல்ய ப்ராதிகூல்யங்கள் ஸம்பவிக்கக்கூடும் என்னும் எண்

ணத்தை அவர்கள் ஹ்ருதயத்துக்குள் கொண்டவர்கள் தாம். மரண காலத்தில் அவர்களாற் செய்யப்படும் க்ரியா கலாபங்களும், ஏசுவின் நாம ஸங்கீர்த்தநங்களும், இவைகளைப்போன்ற மற்ற கணக்கற்ற ஸாதநங்களும் மரணகால மநோவ்ருத்திக்கும் அந்தக் காலத்திலுள்ள மற்றை ஸாமக்ரிகளுக்கும் அவர்கள் ஒருவித ப்ராபல்யத்தைக் கொடுக்கிறார்கள் என்பதை நன்றாக விளக்குகின்றன. பார்ஸிகளின் மதத்திலும், மஹம்மதீய மதத்திலும் இம்மாதிரியான கொள்கைகள் காணப்படுகின்றன. எல்லா மதங்களும், கடைசி காலத்தில் ஸ்வாமியை ஸமாதாநம் செய்துகொள்வது என்பது உண்டு என்று ஒப்புக் கொள்கின்றன. ஏதோ சில மந்த்ரங்களை உச்சரித்துக் கொண்டோ, அல்லது அவைகளை உச்சரிக்கும் ஜநங்களின் மத்யகதனாக இருந்து கொண்டோ, ஒருவன் மரணத்தை அடையும் பக்ஷத்தில், அவனுடைய பூர்வசரிதம் எப்படி இருந்தபோதிலும், அவன் பகவத் க்ருபைக்குப் பாத்ரமாகலாம் என்பதை ஒத்துக் கொள்ளாத மதம் இல்லை என்த் தெரிகிறது.

அந்த்ய கால மநோ பாவம் போல, மரணம் நேரும் ஸ்தலமும் காலமும் அவனுடைய கதியின் நிர்ணயத்தில் ஹேதுக்களாகின்றனவாம். இதன் நிரூபணம அநாவச்யமே.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

ப்ரபவஹு வைகாசிமீ (1927 மே—ஜூன்.)

மே	14	வைமீ 1	ச	திரயோ	41-55	சித்	42-36	வ்ருஷப ஸங்க்ரமணம் 25-26. விஷ்ணுபதி.
,,	15	,, 2	ஞா	சதுர்	47-21	ஸ்வாதி	48-35	சுக்ல சதுர்தசி. ஸ்ரீந்ருஸிம்ஹ ஜயந்தி.
,,	25	,, 12	பு	நவ	22-0	பூராட்	42-22	நவமி தசமி திதித்வயம்.
,,	26	,, 13	வி	தச	15-50	உத்திர	38-9	க்ருஷ்ண ஏகாதசி திதி
,,	27	,, 14	வெ	ஏகா	9-50	ரேவதி	34-9	ஏகாதசி வ்ரதம்.
,,	30	,, 17	தி	அமா	50-9	கார்	25-32	அமாவாஸ்யா ச்ராத்தம்.
,,	31	,, 18	செ	ப்ர	47-17	ரோ	24-12	திருக்கோட்டியூர் நம்பி திருநக்ஷத்ரம்
ஜூன்	10	,, 28	வெ	தஸ்	12-10	ஹஸ்	0-58	சுக்ல ஏகாதசி திதி.
,,	11	,, 29	ச	ஏகா	16-28	சித்தி	6-53	ஏகாதசிவ்ரதம் பெரிய திருமலை நம்பி திருநக்ஷத்ரம்,
,,	12	,, 30	ஞா	த்வா	19-44	ஸ்வா	11-54	சுக்லத்ரயோசி திதி.
,,	13	,, 31	தி	த்ரயோ	21-53	விசா	15-50	அதிதி நம்மாழ்வார் திரு.
,,	14	,, 32	செ	சதுர்	22-46	அநு	18-34	மிதுந ரவி 49-38

86

ஸ்ரீ:

கடிதங்கள்.

ஸ்ரீ. வே. தீ. பத்ராதிபருக்கு :—

1927-வருஷம் மார்ச் மாஸம் 10, 11-ம் தேதிகளில், திருக்குடந்தை வித்வான் தில்லியம்பூர் ஸ்ரீ. உப. வேங்கடாசார்ய ஸ்வாமியால், 'பிரம்ம ஜீவ விவாதம்,' 'பாகவத உத்கர்ஷம்', 'ஸீதா கல்யாணம்' என்னும் விஷயங்களைப்பற்றி மூன்று உபந்யாஸங்கள் ஐயம்பேட்டையில் செய்யப்பட்டன. அவைகளுக்கு, அக்ரஹாரத்திலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களும் ஸௌராஷ்ட்ர மஹா ஜநங்களும் இருநூறு பெயருக் கதிகமாகவே வந்திருந்தார்கள். அந்த உபந்யாஸங்கள் வேத வேதார்த்தங்களாலும் லௌகிக வைதிக த்ருஷ்டாந்தங்களாலும் உபபாதநம் செய்யப்பட் டிருந்தன; கேட்பவர்கள் மநஸ் ஈடுபடும்படி பக்தி வர்த்தகங்களாகவும் இருந்தன. இம்மாதிரி உபந்யாஸம் செய்த ஸ்வாமிக்கும் அந்த உபந்யாஸத்தை நடத்தி வைத்தவர்களுக்கும் இந்த க்ராமவாஸிகளெல்லாரும் மிக்க க்ருதஜ்ஞதை உள்ளவர்களாக இருக்கிறார்கள்.

ஐயம்பேட்டை,
13—3—27.

ஸா. ரங்கநாத ஐயங்கார்.

ஸ்ரீ:

புஸ்தக விமர்சம்.

சேஷாவதாரச் சிறப்பு.

இது, திருவரங்கத்தமுதனாரால் அருளிச் செய்யப்பட்டிருக்கும் 'இராமாநுச நூற்றந்தாதி'என்னும் திவ்ய ப்ரபந்தத்தின் முப்பத்துமூன்றாம் பாட்டாகிய 'அடையார் கமலத்து' என்னும் பாசுரத்தின் வ்யாக்யாந மடங்கியுள்ள ஒரு சிறிய புஸ்தகம். இந்த வ்யாக்யாநம் ப்ரதிவாதிபயங்கரம் ஸ்ரீ உப. அண்ணங்கராசார்ய ஸ்வாமியாற் செய்யப்பட்டிருக்கிறது. இதில், அந்த ஸ்வாமி, ஸ்ரீ பாஷ்யகாரருடைய சேஷாவதாரத்வத்தைப்பற்றி ப்ரஸக்தாநுப்ரஸக்தமாகச் சில விசாரங்களைச் செய்திருக்கிறார். சிலர் இந்த "அடையார் கமலத்து" என்னும் பாசுரத்தை முக்யமான ப்ரமாணமாகக் கொண்டு 'ஸ்ரீ பாஷ்யகாரர் ஸ்ரீ பகவானுடைய பஞ்சாயுதங்களுடைய திருவவதாரமே; அவரைத் திருவநந்தாழ்வானுடைய அவதாரம் என்று சொல்வதற்கு ப்ரமாணமே இல்லை' என்று நிர்ணயிக்கிறார்க ளென்றும், இந்தப் பாசுரத்திற்கு ஸ்ரீ மணவாள மாமுநிகளும் ஸ்ரீ பிள்ளைலோகஞ்சீயரும் அருளிச் செய்திருக்கும் வ்யாக்யாநங்களில் அம்மாதிரி அபிப்ராயப்படி பொருள் முக்யமாகக் கூறப்படவில்லை யென்றும், அப்படியே முக்யமாகப் பொருள் கொண்ட போதிலும் சேஷாவதாரத்வத்தையே பல ஆசார்யர்கள் ஆதரித் திருக்கிறபடியால் 'அதற்கு ப்ரமாணமே இல்லை' என்று ஸாதிப்பது ந்யாய விருத்தமென்றும், சில ஆசார்யர்கள் ஸ்ரீ பாஷ்யகாரரைச் சேஷாவதார மென்றும் மற்றும் சிலர் அவரைப் பஞ்சாயுதாவதார மென்றும் விவிதமாக வர்ணித்திருந்த போதிலும் ஸ்தோத்ர நூல்களில் காணப்படுமவைகளை ப்ரசம்ஸா பரங்களென்றும் சரித்ர நூல்களில் காணப்படுமவைகளை ஸ்நாபநார்ஹங்களென்றும் நாம் நிர்வஹிக்க வேண்டு மென்றும், இவ்வாறு பஹுவான யுக்திகளையும் ப்ரமாணங்களையும் கொண்டு, ஸ்ரீ ப்ரதிவாதி பயங்கரம் ஸ்வாமி, ஸ்ரீ பாஷ்யகாரர் சேஷாவதார மென்றே ஸித்தாந்தம் செய்திருக்கிறார். ஆனால், இந்த ஸித்தாந்தத்தில் தமக்கு எவ்வித ஆக்ரஹமும் இல்லை யென்றும், 'பூர்வ பக்ஷிகள் ஆக்ரஹம் தோற்ற ஒருவித நிர்பந்தத்தில் புகுகிறார்களே! அது இம்மாதிரி விஷயங்களில் அத்யந்தம் அநுசிதம் என்பதை விவரிப்பதற்கு மாத்ரம் ப்ரக்ருத விசாரம் செய்யப் பட்டது' என்றும் அவர் கடைசியில் எழுதி இருப்பது நமக்கு ஆஹ்லாத கரமாக இருக்கிறது. இந்தப் புஸ்தகத்தை அபேக்ஷிப்பவர்கள், "திவ்யார்த்த தீபிகை ஆபீஸ்", 32, பந்தர் தெரு, மதராஸ் என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். இதன் விலை அணா 2.

87

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஶ்ரீந்ருஸிம்ஹவரப்ரஹ்மணே நம:

யோऽநந்த: ப்ருதிவீம் ததாதி ஶிரஸா ப்ருஹத்வாம்

ஸஞ்ஜீவய த்ரிவிதஶக்தியா: ஸ்வயாந்நா ।

சந்த்ராம்ஶு ஹஸ்தாரணஶ்ரவணக்ஷமாதீந்

ப்ராணா யஸ்ய ஸமவதே வாஸுதேவாய தஸ்மை ॥

பத்ராதிபரின் குறிப்புகள்.

நமது ஆசார சீர்திருத்தங்கள்.

நமது தேசத்திய ஏழை ஜநங்கள் அநுபவிக்கும் கஷ்டங்களைப் பார்த்து, அவைகளை யதாசக்தி நிவ்ருத்திப்பிக்கவேண்டும் என்னும் தயையுடன், அதற்கு உசிதங்களான உபாயங்களைத் தேடிவரும் மஹாந்கள் இப்பொழுது இத்தேசத்தில் பலர் இருக்கிறார்கள். மஹாத்மா காந்தி, ஸ்ரீமாந் லாலா லாஜபுத் ராய், ஸ்ரீமாந் பண்டித மதந மோஹந மாளவியா முதலான பெரியோர்கள் இவர்களுட் சிலர். இவர்களெல்லாரும் ஸ்வார்த்தம் என்பதையே மறந்து, பரார்த்தத்திற்காகவே உழைத்து வருகிறார்கள் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இந்தியாவின் துர்தசையை நிவ்ருத்திப்பதையே இவர்களெல்லாரும் ஒரே நோக்கமாகக் கொண்டவர்கள். சிற்சில அப்ரதாநங்களான அம்சங்களில் இவர்களுக்குப்பரஸ்பரம் அபிப்ராய பேதங்கள் இருந்த போதிலும், ப்ரதாநமான அம்சத்தில் இவர்கள் எல்லாரும் ஏக மநஸர்களே. இவர்களுடைய மநஸ்ஸின் ஸாது பாவத்தையும் இவர்கள் அநந்ய ப்ரயோஜநமாக ஜகதுஜ்ஜீவநத்திற்காகவே பரிச்ரமப்படும் சீலத்தையும் பற்றி, ஒருவரும் எவ்விதமான மலிந வார்த்தையும் சொல்ல முடியாது. ப்ரமத்திற்கு எவ்வித ஸம்பாவனையுமில்லாத புத்தியின் கூர்மையையும் லோகாநுபவத்தையும் உடையவர்கள் இவர்கள்; அத்யுதாரமும் ருஜுவுமான மநஸ்ஸை உடைய இவர்கள் விஷயத்தில் விப்ரலிப்ஸைக்கு அவகாசமே இல்லை. இப்படிப்பட்டவர்கள், இக்கால ஸ்திதி முழுவதையும் நன்றாகப் பராமர்சித்து ஏகமுகமாக ஒரு மார்க்கத்தை 'இது நல்வழி' என்று எடுத்துக் காட்டினால், அதை நாம் மிக்க விச்வாஸத்துடனும் கௌரவத்துடனும் ஆதரிக்க வேண்டுமே தவிர, அநாதரிக்கக்கூடாது.

இவர்கள் செய்யும் உபதேசங்கள் பல. அவைகளுள் நமது ஆசார ஸம்பத்தமான உபதேசம் ஒன்று உண்டு. அதை மாத்ரம் நாம் சற்றுப் பராமர்சித்துப் பார்ப்போம். அதாவது—நமக்குள் பஹுகாலமாக வழங்கி வந்துகொண்டிருக்கும் வர்ணாச்ரம தர்மாநுஷ்டாநம். ஆதிகாலத்தில் நமது மஹர்ஷிகளால் அநேக விஷயங்களை ஆலோசித்து ஸர்வ ஜநங்களுக்கும் ச்ரேயஸ்ஸாத

நமாக ஏற்படுத்தப்பட்டிருந்தபோதிலும், கால ஸ்திதி அப்பொழுதுக் கிப்பொழுது பல ப்ரகாரங்களில் மாறிவிட்டபடியால், அந்த அநுஷ்டானங்களுள் சிலவற்றையாவது இக்கால ஸ்திதிக்கு அநுகுணமாக நாம் மாற்றவேண்டும் என்பதுதான். முன்காலத்திற் போல, நாம், நமது தேசத்திய ஜனங்களுடன் மாத்ரம் ஸஹவஸித்துக்கொண்டும், மற்றைத் தேசங்களில் நடைபெறும் நடவடிக்கைகளொன்றையும் கவனியாமலே நமது க்ஷேமத்தை மாத்ரம் நமக்குள்ளாகவே தேடிக்கொண்டும் வர்த்தித்து வரக்கூடுமென்பது இக்காலத்தில் ஸாத்யமில்லாமற்போய்விட்டது. கப்பல் யாத்ரை ஆகாச விமாந யாத்ரை தந்தி ரயில் மார்க்கம் இவை முதலியவைகளின் ஸௌகர்யங்கள், தேசாத் தேசம் போய் ஸர்வத்ர ஸஞ்சரிப்பதையும் ஓரிடத்தில் நடைபெறும் வ்ருத்தாந்தங்களை மற்றைத் தேசங்களிலுள்ள ஜநங்களெல்லாரும் கால விளம்பமின்றிக்கே அறிவதையும் அதிமாத்ரம் ஸுலபமாகச் செய்துவிட்டன. அதிக தூரத்திலுள்ள தேசங்களுக்குப் போய் வருவதெல்லாம் ஸ்வ தேச ஸஞ்சாரத்திற்கு ஸமமாகவே இருந்து வருகின்றது. ஏதோ சில பழைய காலத்து வழக்கத்தை அநுஸரித்து நாம் தேசாந்தரங்களுக்கு அவ்வளவாகப் போகாமல் இருந்தபோதிலும், தேசாந்தரத்து ஜநங்கள் நமது தேசத்துக்கு நிராபாதமாக வருவதையும், நம்முடைய நடைவடிக்கைகளை ஆராய்ச்சி செய்வதையும், நம்முடன் க்ரய விக்ரயங்களைச் செய்வதையும் பார்க்கிறோம். தவிரவும், வித்யாப்ரசாரம் முன்னையினும் இப்பொழுது அதிகமாகிக்கொண்டு வருகிறபடியால், இதற்கு முன் ஜகத்தின் வ்ருத்தாந்தத்தைத் தெரிந்துகொள்வதில் மிகவும் நிருத்ஸாஹராக இருந்த ஸாமாந்ய ஜநங்களும் இப்பொழுது அந்த வ்ருத்தாந்தத்தைத் தெரிந்துகொள்வதில் ஊக்கமுள்ளவர்களாய், அதன் குண தோஷ விசாரங்களைச் செய்து, புகழ்ந்து பேசும் விஷயங்களைப் புகழ்ந்தும், நிந்திக்கவேண்டிய விஷயங்களை நிந்தித்தும் வருவதையும் எல்லாரும் பார்க்கலாம். இம்மாதிரி, பல ஜநங்களுடன் ஸஹவாஸமும் க்ரய விக்ரய ரூபமான வ்யாபாரங்களும் கதாகதியும் இன்னும் இவைபோன்ற வேறு நடவடிக்கைகளும் இப்பொழுது நமக்கு ப்ரதிதிநம் நடைபெறும் கார்யங்களாக நேர்ந்திருக்கின்றன. இந்த ஸந்தர்ப்பத்தில், நாம் பூர்வ காலத்திற்போல ஸகல விஷயங்களிலும் ஔதாஸீந்யத்தை வஹித்துப் போவது உசிதமாகுமா? நமது ஸம்ரக்ஷணம் நமது உத்ஸாஹத்தையும் பரஸ்பரம் நாம் செய்துகொள்ளும் க்ருத ப்ரதிக்ருதங்களையும் சார்ந்ததன்றோ? இதர தேசத்து ஜநங்கள் நமது தேசத்திற்கு வந்தால் நாம் அவர்களுடைய தேசத்திற்குப் போயும், அவர்கள் ஸௌஹார்த்தத்தை முன்னிட்டு நம்மை ஸத்கரித்தால் நாம் அவர்களை அம்மாதிரியே ஸத்கரித்தும், அவர்கள் நம்மை ஆக்ரமிக்க முயன்றால் நாம் அவர்களை ஆக்ரமித்தும், இம்மாதிரி அவர்களுடன் நாமும் கலந்து வ்யவஹரித்து வந்தாலன்றோ நமக்கு அபிவ்ருத்தி என்பது ஸம்பவிக்கும்? பஹு ஜநங்களுடையப் பராமர்சத்துக்கு நாம் கோசரமாகிவிட்டபடியால், அவர்களுக்கு

ஜுகுப்ஸாவஹங்களாகவும் நமக்கும் ந்யாய விருத்தங்களென்று தோன்றக் கூடியவுமான நமது நடவடிக்கைகளை ந்யாயத்திற்கு ஒத்துவரும்படி திருத்தம் செய்துகொண்டு, அவர்களை நாம் கௌரவித்தும் அவர்களால் நாம் கௌரவிக்கப்பட்டும் நடந்துவரவேண்டு மன்றோ? இவ்விதம் செய்யாவிட்டால் நமக்கு மூலதோ ஹாநி ஸம்பவித்துவிடுமே! இவ்வாறு அம்மஹான்கள் கால ஸ்திதியைப் பார்த்துப் பயப்படுகிறார்கள்.

இப்படிச் சொல்வதன் கருத்து என்னவென்றால்—'நமது சாஸ்த்ரம் நிஷேதிக்கும் ஸமுத்ர தரணத்தை நாம் பெரியதொரு நிஷேதமாக எண்ணக் கூடாது. கடுமையான போஜந நியமங்களையும் சண்டாளாதிகளுடைய ஸம்ஸர்க்க வர்ஜநத்தையும் தூர விலக்கவேண்டும். நித்ய கர்மங்களுக்கு எப்பொழுதாவது லோபம் ஸம்பவித்தால் அதை அநாதரிக்கவேண்டும். வ்ருத்தியை அவலம்பிப்பதிலும், எந்த எந்த வ்ருத்தி எவரெவர்களுக்கு ஸுலபமாகவும் லாபகரமாகவும் தோன்றுகின்றதோ அந்தந்த வ்ருத்தியை அவரவர்கள் ஆலோசனையின்றி ஏற்றுக்கொள்ளவேண்டும். இம்மாதிரி சக்தி விசேஷ ஸம்பாதநத்திற்குப் பரம்பரையாக உபகாரகமாயுள்ள விதவா விவாஹம் ப்ரௌடா விவாஹம் ஸ்த்ரீ ஸ்வாதந்த்ர்யம் முதலிய சில சீர்திருத்தங்களையும் நாம் செய்து கொள்ளவேண்டும்' என்பதுதான்.

இந்த உபதேசம் ஸர்வப்ரகாரத்திலும் ஸாதுவா? இல்லாவிட்டால் ஒரு கால் கிஞ்சி தம்சத்தில் இது ஆக்ஷேபார்ஹமாக இருக்குமா என்பதைத்தான் நாம் விசாரிக்கவேண்டும். முதலில், இந்த லோக வ்யாபாரங்களிலிருந்து ஹார்த்தமான விரக்தியை அடைந்து மோக்ஷ புருஷார்த்தத்தையே நோக்கமாகக்கொண்டு வர்த்தித்து வரும் முமுக்ஷுக்களுக்கு, இவர்கள் சொல்வது ஒன்றும் அந்வயிக்கமாட்டாது என்பதை நாம் கவனிக்க வேண்டும். அவர்களுக்கு இந்த லோகத்திய ச்ரேயஸ்ஸும் நாசமும் அவ்யாவர்த்தகங்களே. ஆனால், அப்படிப்பட்ட முமுக்ஷுக்களாக ஸ்வல்ப ஜநங்களே காணப்படலாம். மற்றை ஜநங்கள் எல்லாரும் புபுக்ஷுக்கள் தாம். இவர்களுக்கு, இஷ்டஸித்தி கிடைக்காமல் தவறும் பொழுதும் அநிஷ்டம் நேரும் பொழுதும் பெரியதுக்கம் ஸம்பவிக்கின்றது என்பது அநுபவ ஸித்தம். இந்த மஹான்கள் சொல்வதுபோல இவர்களுக்கு ஏதாவது ஒரு ச்ரேயோ மார்க்கத்தைத் தேடவேண்டியது அவச்யமே. ஆனால், உண்மையான ஹிந்துக்களாய் இருக்கிற நாம், நமது சாஸ்த்ரங்களுக்கு விருத்தமாயுள்ள மார்க்கத்தில் ஒரு பொழுதும் ப்ரவ்ருத்திக்கக்கூடாதன்றோ? முமுக்ஷுக்களாக இருந்தாலும் புபுக்ஷுக்களாக இருந்தாலும் ஹிந்துக்கள் எல்லாருக்கும் சாஸ்த்ரமே கதி. முமுக்ஷுக்கள் விஷயத்தில் அது எவ்விதம் ஹிதபரமோ, அதேமாதிரி மற்றவர்களுக்கும் அது ஹிதத்தையே அநுசா

ஷிக்கின்றது என்பது நமது கொள்கை. அந்தக் கொள்கைக்கு விருத்த மாக நாம் நடந்துகொண்டால் நாம் ஹிந்து கோடியிலேயே சேரமாட்டோம் என்பது திண்ணம்.

த்ரிவர்க்க பரர்களான ஸாமாந்ய ஜநங்களுக்கு ச்ரேயஸ் ஸாதக மென்று தாத்காலிகமாகக் கீழ்க்கூறப்பட்டுள்ள மஹான்களாற் செய்யப்படும் உபதேசம், ஹிந்து மதத்தை அவலம்பித்திருக்கும் நம்மால் அநுஷ்டிக்கத் தகாதது என்பதே நமது அபிப்ராயம். ஆனல், இவ்வளவு பெரியோர்கள் அப்படிப்பட்ட நிஷித்த வழிகளை உபதேசிப்பார்களா? என்று கேட்கலாம். அவர்கள் ஒரு தவறுதலான எண்ணம் கொண்டு அம்மாதிரி சொல்லத் துணி கிருர்கள் என்று நாம் நினைக்கிறோம். அந்த எண்ணமாவது 'ஹிந்து மதம் என்பது கேவலம் உபநிஷத்துக்கள் போதிக்கும் தத்வ ஜ்ஞாநத்தை மாத்ரம் சார்ந்து நிற்கின்றது; ஒருவன் தத்வ ஜ்ஞாநத்துடனும் ஸர்வத்ர ஸமபுத்தி யுடனும் ஸர்வ பூத ஸௌஹார்த்தத்தைச் செய்துகொண்டு ஈச்வரனிடத்தில் ப்ரீதி செய்து வந்தால் அவன் ஹிந்துவாகவே இருக்கிறான்; மற்ற கர்மாநுஷ் டாநங்களில் லோபம் நேர்ந்தால் அது அவனுக்குப் பதந ஹேது ஆகாது' என்பது தான். இது ஹிந்து மதத்திற்கு ஒத்ததன்று. 'தேஹத்தைக் காட்டி லும் வேறுபட்ட ஆத்மா என்று ஒன்று உண்டு; அது நித்யமான வஸ்து; அது கேவல ஜ்ஞாந ஸ்வரூபம்; அக்நி அதைத் தஹிக்கமாட்டாது; காற்று அதை உலர்த்தமாட்டாது' இத்யாதியான ஜ்ஞாநத்தை வேறு எந்த மதம் போதிக்க வில்லை? 'ஜநங்களுக்கு, அவரவர்களுடைய அதிகாரத்துக்குத் தகுந்தது போலச் சிற்சில கர்மாநுஷ்டாநங்கள் உண்டு; கீழ்ச்சொல்லப்பட்டுள்ள ஜ்ஞாநத் துடன் இந்தக் கர்மங்களையும் சாஸ்த்ரத்திற் சொல்லியிருக்கிறபடி அவரவர் கள் அநுஷ்டித்து வரவேண்டும்' என்பதன்றோ ஹிந்து மதத்தின் அஸா தாரணமான கொள்கை? இந்த அம்சத்திற்கு ஹாநிவந்தால் மதமே நாசமாகி விடும் என்பதை அவர்கள் அறியவில்லைபோலும்! 'நமது ஸம்ரக்ஷணத்தை நாம் அவச்யம் செய்துகொள்ளவேண்டுமே; அதற்கு ஆபத் ஸம்பவிக்கும் காலத் தில் நமது மத அநுஷ்டாநம் நம்மைக்காப்பாற்ருவிட்டால் நாம் என்ன செய்ய மாட்டுவோம்?' என்று அவர்கள் கேட்கலாம். 'இம்மாதிரியான ஆபத்காலத்தை த்ரிகால ஜ்ஞாநிகளான நமது சாஸ்த்ரகர்த்தாக்கள் ஜ்ஞாநக் கண்ணுல் பூர்வமே பார்த்து, ஆபத்கால தர்மமென்று சில கர்மாநுஷ்டாந மாறுதல்களைச் சொல்லி யிருக்கிறார்கள். அப்படி மாற்றப்பட்டிருக்குமவைகளை மாத்ரம் அநுஷ்டித்த போதிலும், அது நமது ச்ரேயஸ்ஸுக்குப் போதுமானது. அவைக ளின் அநுஷ்டாநத்தால் நமது மதமும் குலையாது நிற்கும் என்பது அவர்களு டைய அபிப்ராயம்' என்பதுதான் அந்த ப்ரச்நத்திற்கு ஸமாதாநம். சாஸ்த்ரத்தைக் கைவிட்டு நமது யுக்திகளைக் கொண்டு நாம் சிலவற்றை ஸ்தா பிக்க முயல்வது நமக்கு ந்யாயமன்று; அது அநவஸ்தைக்கும் காரணமாகும்.

அப்படி சாஸ்த்ரத்திற் சொல்லப்பட்டுள்ள ஆபத் தர்மாநுஷ்டாநமும் நம்முடைய ஸம்ரக்ஷணத்திற்கு ப்ரதி பந்தகமானுல், 'அப்படி நாசம் வந்தால் வரட்டும்; அதுவே ச்லாக்யம்' என்று நாம் சொல்லத் துணிவோம்.

தவிரவும், 'தைவம் என்று ஒன்று உண்டு, ஆத்மா என்று ஒன்று உண்டு' இத்யாதியான ஜ்ஞாநத்தை எந்த சாஸ்த்ரம் உபதேசிக்கின்றதோ அந்த சாஸ்த்ரமே

"தஸ்மாச் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்யவ்யவஸ்திதௌ"

[கார்யாகார்யங்களை நிர்ணயிக்கும் விஷயத்தில் சாஸ்த்ரமொன்றே ப்ரமாணமாகவேண்டும்] என்றும் உபதேசிக்கின்றது. ஒரு அம்சத்தில் சாஸ்த்ரத்தை ப்ரமாணமாகவும் மற்றொன்றில் அதை அப்ரமாணமாகவும் அங்கீகரிப்பது புத்திசாலிகளின் லக்ஷணமாகுமோ?

"ந சைஷா ப்ருஹஸ்பதி புத்திர் புத்திமத்ஸு ந்யாய்யா ஸ்வநிஸ்வய:".

காலம் மாறிவிட்டது என்பது உண்மை; ஆபத் ஸம்பவிக்கின்றது என்பதும் உண்மை; ஆத்ம ஸம்ரக்ஷணம் செய்துகொள்ள வேண்டியது அவச்யம்; அந்த ஸம்ரக்ஷணத்திற்காக நமது ஆசாரங்களைச் சீர்திருத்தம் செய்யவேண்டும் என்பதும் அவச்யம். ஆனுல், அந்தச் சீர்திருத்தங்களை எல்லாம் மனம்போனவாறே செய்யக்கூடாது என்று மாத்ரம் நாம் சொல்வோம். அவைகளைச் சாஸ்த்ரத்துக்குக் கட்டுப்பட்டுச் செய்துகொண்டு, நாம் நமது ஸம்ரக்ஷணத்தைத்தேடிக்கொள்ள முயலவேண்டும். அப்படியும் ஸம்ரக்ஷணம் கிடைக்காவிட்டால், நாம் அதைப்பற்றி சோகிக்கக்கூடாது. இதுதான் பகவத் ஸம்மதமாக இருக்குமென்று நாம் நினைக்கிறோம்.

* * *

வார்ஷிக மஹா ஸங்கம். ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் வார்ஷிக மஹாஸங்கம் நிகழும் சித்திரைமீ 30, 31உகளில் ஸ்ரீ புள்ளம் பூதங்குடியில் நடைபெறுமென்றும், அந்தக் காலத்தில் யதாபூர்வம் பண்டிதர்களால் நமது மதவிஷயமாகப் பல உபந்யாஸங்கள் செய்யப் படுமென்றும், அந்தக் காலத்தில் ஆஸ்திகர்களாயுள்ள ஹிந்துக்களெல்லாரும் அவ்விடம் வந்து ஸங்கத்தைச் சிறப்புடன் நடத்திவைக்க வேண்டுமென்று ஸபையின் அதிகாரிகள் ப்ரார்த்திக்கிறார்களென்றும் ஸபையின் கார்யதர்சி மற்றொரு பக்கத்தில் ப்ரசுரம் செய்திருப்பதை நமது அபிமாநிகளெல்லாரும் பார்க்கலாம். சென்ற மாஸத்திய தீபிகையில் இந்த ஸங்கம் சித்திரை மாஸம் ஆரம்பத்திலேயே நடைபெறுமென்று ப்ரசுரம் செய்யப்பட்டிருந்தது. ஆனுல், அப்ரதீக்ஷிதமாகச் சில இடையூறுகள் மத்யே ஸம்பவித்து விட்டபடியால் அது விக்நிதமாகி இப்பொழுது ப்ரசுரம் செய்திருக்கும் ப்ரகாரம் சித்திரை மாஸக்கடைசியில் நடத்தப்படுகின்றது. ஆஸ்திகர்களெல்லாரும் அந்த ஸங்கத்திற்கு வந்து அதை நிர்விக்நமாக நடத்தி வைப்பார்களென்று நாம் நம்புகிறோம்.

சென்ற பதினைந்துவருஷ காலமாக இந்த ஸங்கம் ஒவ்வொரு வருஷத்திலும் ஒவ்வொரு இடத்தில் அவ்வவ்விடங்களிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களால் வரவழைக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இவ்வர்ஷத்தில் திருக்குடந்தை பெரியதெரு ஸ்ரீ. உப கதாதரபுரம் சக்ரவர்த்தி ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, இந்த ஸங்கத்தை ஸ்ரீ புள்ளம் பூதங்குடியில் நடத்திவைக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் ஸபையின் அதிகாரிகளுடன் அதைப்பற்றி ப்ரஸ்தாவித்து, அவர்களும் அதை ஆமோதிக்கவே, ஸ்ரீ அழகிய சிங்கருடைய நியமநத்தைப் பெற்றுக்கொண்டு, இந்தக் கைங்கர்யத்தை ஸமீசீநமாக நடத்துவதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளையும் செய்துவருகிறார். ஸ்ரீ உப. குமட்டித் திடல் ஜி. க்ருஷ்ண ஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி (அய்யங்கார் தெரு) முதலிய திருக்குடந்தை வாஸிகளான பல ஆஸ்திகர்களும் இந்தக் கைங்கர்யத்தில் மிக்க உத்ஸாஹத்துடன் அந்வயித்திருப்பதாக நாம் அறிகிறோம். இவர்களெல்லாரும் இந்த ஸபை விஷயமாக இவ்வளவு ச்ரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது அத்யந்தம் ஆஹ்லாதகரமாக இருக்கின்றது. இவர்களுடைய ஸாத்விகமான இந்த முயற்சியை ஸ்ரீ சரண்யன் க்ருபையுடன் தலைக் கட்டிவைக்க வேண்டுமென்று நாம் அவனை ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ அழகிய சிங்கரும் இந்த ஸங்க விஷயத்தில் பூர்ண கடாக்ஷத்துடன் எழுந்தருளி இருப்பதாக நாம் கேள்விப் படுகிறோம். ஏற்கெனவே விஜ்ஞாபித்துக் கொண்டிருக்கிற ப்ரகாரம் இது ஸபைக்குப் பெரியதொரு ச்ரேயஸ்ஸுக்கு ஹேது என்பதில் ஆக்ஷேபமில்லை. இன்னும் மற்றை அநேக காரணங்களாலும் இது நமக்கு மிக்க ஸந்தோஷத்தை ஜநிப்பிக்கின்றது. உத்தரோத்தரம் இந்தக் கடாக்ஷம் அபிவ்ருத்தமாகிக் கொண்டு வரவேண்டும் என்பது நமது ஹார்தமான ப்ரார்த்தனை.

* * *

மடாதிபதிகளின் மர்யாதை.

சென்ற ஸஞ்சிகையில், 'மஞ்ஜு பாஷிணி' என்னும் பத்ரிகையில் அதன் ஸம்பாதகர் மடாதிபதிகள் ஆலயங்களுக்குள் தமது பரிச்சதங்களுடன் ப்ரவேசிப்பதைப்பற்றி வெளிப்படுத்தி யிருந்த அபிப்ராயத்தை நாம் கொஞ்சம் விசாரித்திருந்தோம். அதற்கு ஸமாதாநமாக அந்த ஸ்வாமி "[illegible]" [நாம் எழுதி இருந்த வாக்யத்தால் ஒருவரும் வருத்தம் அடையக்கூடாது. அந்த வாக்யத்தில் அப்படி வருத்தத்தைக் கொடுக்கக்கூடிய வார்த்தைகள் ஏதாவது இருந்தால், அதைப்பற்றி நாமே சோகிக்கிறோம்] என்று எழுதுகிறார். 'நமக்கு ஒரு பொழுதும் எவ்வித வருத்தமும் இல்லை; வஸ்து ஸ்திதியை ஸ்மரிப்பிக்கவேண்டும் என்பது மாத்ரம் நம்மை அம்மாதிரி எழுதுவதில் ப்ரவ்ருத்திப்பித்தது' என்பதை அந்த ஸ்வாமிக்கு இதன் வழியாக விண்ணப்பம் செய்துகொள்ளுகிறோம்.